# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின்
# பாராளுமன்றம்

---

## *2016 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க, ஆசிய உட்கட்டமைப்பு முதலீட்டு வங்கி உடன்படிக்கை (ஏற்புறுதி) சட்டம்*

---

*(2016 ஆம் ஆண்டு மே மாதம் 30 ஆம் திகதி அத்தாட்சிப்படுத்தப்பட்டது)*

*அரசினர் ஆணைப்படி அச்சிடப்பட்டது*

---

*2016, யூன் மாதம் 03 ஆந் தேதிய* **இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானப் பத்திரிகையின்** II ஆம் பகுதிக்குக் குறைநிரப்பியாக வெளியிடப்பட்டது

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்தில் பதிப்பிக்கப்பெற்றது

கொழும்பு 5, அரசாங்க வெளியீட்டலுவலகத்தில் பெற்றுக்கொள்ளலாம்

**விலை : ரூபா 70.00** **தபாற் செலவு : ரூபா 20.00**

**2016 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க, ஆசிய உட்கட்டமைப்பு முதலீட்டு வங்கி உடன்படிக்கை (ஏற்புறுதி) சட்டம்**

*[2016 ஆம் ஆண்டு மே மாதம் 30 ஆம் திகதி அத்தாட்சிப் படுத்தப்பட்டது.]*

*ச.வ.ஓ. 4/2016*

***ஆசிய உட்கட்டமைப்பு முதலீட்டு வங்கியை (ஆஉமுவ) தாபிக்கின்ற உடன்படிக்கைக்கு இலங்கை ஒரு கையொப்பமிடுநராக அவ்வுடன்படிக்கை இலங்கையினால் ஏற்புறுதி செய்யப்படுவதனை அல்லது ஏற்றுக் கொள்ளப்படுவதனை அதிகாரமளித்து அவ்வங்கியின் உறுப்பினரொருவராக வருவதற்கு இலங்கையை இயலச்செய்வதற்கும், அத்துடன் அதனோடு தொடர்புபட்ட அல்லது அதன் இடைநேர்விளைவான கருமங்களுக்கு ஏற்பாடுசெய்வதற்குமானதொரு சட்டம்.***

*இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பாராளுமன்றத்தினால் பின்வருமாறு சட்டமாக்கப்படுவதாகுக:-*

*சுருக்கப் பெயரும் நடைமுறைக்கு வரும் தேதியும்.*

***1.*** *இச்சட்டம், 2016 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க, ஆசிய உட்கட்டமைப்பு முதலீட்டு வங்கி உடன்படிக்கை (ஏற்புறுதி) சட்டம் என எடுத்துக்காட்டப்படலாமென்பதுடன், வர்த்தமானியில் வெளியிடப்படும் கட்டளைமூலம் அமைச்சர் தீர்மானிக்கக் கூடியவாறான அத்தகைய தேதியன்று நடைமுறைக்கு வருதலும் வேண்டும்.*

*ஆசிய உட்கட்டமைப்பு முதலீட்டு வங்கியைத் தாபிக்கின்ற உடன்படிக்கையின் ஏற்புறுதிக்கு, ஏற்றுக் கொள்கைக்கு அல்லது அங்கீகாரத்துக்கு அதிகாரமளித்தல்.*

***2.*** *நிதி என்னும் விடயம் குறித்தளிக்கப்பட்ட அமைச்சர் அல்லது அவரினால் அதிகாரமளிக்கப்பட்ட ஆளொருவர் இலங்கை அரசாங்கத்தின் சார்பில் -*

*(அ) (இச்சட்டத்தில் முறையாக "உடன்படிக்கை" மற்றும் "வங்கி" எனக் குறிப்பீடு செய்யப்படுவதும்) இலங்கை அதற்கான கையொப்பமிடுநரொருவராகவுள்ளதும் இச்சட்டத்துக்கான அட்டவணையில் தரப்பட்டுள்ளதும் ஆசிய உட்கட்டமைப்பு முதலீட்டு வங்கியைத் தாபிக்கின்றதுமான உடன்படிக்கை உறுப்புரையை ஏற்புறுதி செய்தல், ஏற்றுக்கொள்ளுதல் அல்லது அங்கீகரித்தல் வேண்டும்; அத்துடன்*

2-PL 009909 -961 (2016/05)

(ஆ) இலங்கையின் சட்டங்களுக்கிணங்கப் பிடித்தமின்றி இலங்கை அரசாங்கத்தினால் உடன்படிக்கையின் அத்தகைய ஏற்புறுதியின், ஏற்றுக்கொள்கையின் அல்லது அங்கீகாரத்தின் சாதனமொன்றை வங்கியிடம் வைப்பிடுதல் வேண்டும்.

*இலங்கையிலுள்ள வங்கிக்கு அந்தஸ்து, விடுபாட்டுரிமைகள், சிறப்புரிமைகள் மற்றும் விலக்களிப்புகள் அளிக்கப்படுதல்.*

**3.** உடன்படிக்கையின் அத்தியாயம் IX இன் ஏற்பாடுகள், இலங்கையில் சட்டவலுவைக் கொண்டிருத்தல் வேண்டுமென்பதுடன், அதற்கிணங்க வங்கியானது, உடன்படிக்கையின் அத்தியாயம் IX இல் குறித்துரைக்கப்பட்டவாறான அல்லது 1996ஆம் ஆண்டின் 9 ஆம் இலக்க, இராஜதந்திர சிறப்புரிமைகள் சட்டத்தின் அல்லது வேறேதேனும் சட்டத்தின் நியதிகளின்படி அளிக்கப்பட்டவாறான அந்தஸ்தையும், விடுபாட்டுரிமைகளையும், சிறப்புரிமைகளையும், விலக்களிப்புகளையும் இலங்கையில் கொண்டிருத்தலும் வேண்டும்.

*திரட்டு நிதியத்திலிருந்தான கொடுப்பனவுகள்.*

**4.** உடன்படிக்கையின் நியதிகளின்படி செலுத்தப்படுவதற்குத் தேவைப்படுத்தப்பட்டவாறான இலங்கை அரசாங்கத்தினால் வங்கிக்குச் செலுத்தப்படற்பாலவாறான அல்லது காலத்துக்குக் காலம் செலுத்தப்படற்பாலனவாக வரக்கூடியவாறான அத்தகைய பணத்தொகைகள் திரட்டு நிதியத்திலிருந்து செலுத்தப்படுதல் வேண்டும்.

*அரசாங்க வாக்குறுதிப் பத்திரங்களை அல்லது கடப்பாடுகளை வழங்குதல்.*

**5.** (1) நிதி என்னும் விடயம் குறித்தளிக்கப்பட்டுள்ள அமைச்சர், இலங்கை அரசாங்கத்தின் சார்பில் அவசியமென அவர் கருதினால், உடன்படிக்கையின் 6 ஆம் உறுப்புரையின் 5(ஆ) என்னும் பந்தியின்கீழான ஒப்பப்பணத்தைக் கொடுப்பனவு செய்யும் நோக்கத்துக்காக, உடன்படிக்கையின் 6 ஆம் உறுப்புரையில் விதிக்கப்பட்ட அத்தகைய சூழ்நிலைகளில் இலங்கையின் நாணயத்துக்குப் பதிலாக, வங்கிக் கணக்குக்குக் கோரிக்கையின் மேல் சமப்பெறுமதியில் செலுத்தப்படற்பாலனவான அத்தகைய எவையேனும் கைமாற்றத்தக்கனவல்லாத மற்றும் வட்டியீட்டாத வாக்குறுதிப் பத்திரங்களை அல்லது வேறு கடப்பாடுகளை, அவசியமென அவர் கருதுகின்றவாறான அத்தகைய படிவத்தில் உருவாக்கி வங்கிக்கு வழங்கலாம்.

(2) நான்காம் பிரிவின்கீழ் திரட்டு நிதியத்திலிருந்து செலுத்தப் படுவதற்குத் தேவைப்படுத்தப்பட்ட எவையேனும் பணத்தொகை களை வழங்கும் நோக்கத்துக்காக, நிதி என்னும் விடயம் குறித் தளிக்கப்பட்டுள்ள அமைச்சர், வட்டியீட்டாத மற்றும் கைமாற்றத் தக்கனவல்லாத வாக்குறுதிப் பத்திரங்களை அல்லது கடப்பாடு களை அவர் அவசியமெனக் கருதக்கூடியவாறான அத்தகைய படிவத்தில் உருவாக்கி இலங்கை மத்திய வங்கிக்கு வழங்குவதன் மூலம் இலங்கை அரசாங்கத்தின் சார்பில் கடன்களைத் திரட்ட லாம்.

(3) வேறேதேனும் எழுத்திலான சட்டத்தின் ஏற்பாடுகளுக் கமைய, இப்பிரிவின் (2) ஆம் உட்பிரிவின் ஏற்பாடுகளுக்கிணங்க உருவாக்கப்பட்டு வழங்கப்பட்ட எவையேனும் வாக்குறுதிப் பத்திரங்களை அல்லது கடப்பாடுகளை ஏற்றுக்கொள்வதற்கும் வைத்திருப்பதற்கும் இலங்கை மத்திய வங்கிக்கு இத்தால் அதிகாரமளிக்கப்படுகின்றது.

(4) இப்பிரிவின் (1) ஆம் உட்பிரிவின்கீழ் உருவாக்கப்பட்டு இலங்கை மத்திய வங்கிக்கு வழங்கப்பட்ட எவையேனும் பத்திரங் களை அல்லது கடப்பாடுகளை மீட்பதற்குத் தேவைப்படக் கூடியவாறான அத்தகைய பணத்தொகைகள் திரட்டு நிதியத்தி லிருந்து செலுத்தப்படுதல் வேண்டும்.

**6.** உடன்படிக்கையின்கீழ் வங்கியிடமிருந்து இலங்கை அரசாங் கத்தினால் அல்லது அதன் சார்பில் பெறப்பட்ட எல்லாப் பணத் தொகைகளும் திரட்டு நிதியத்தினுட் செலுத்தப்படுதல் வேண்டு மென்பதுடன், அவ்வாறு பெறப்பட்ட பணத்தொகைகள், மூல தனத்தை அவை குறிக்கும் அளவுவரை, ஏதேனும் எழுத்திலான சட்டத்தின்கீழ் அதற்கென வேறுவகையில் ஏற்பாடு செய்யப்பட்டி ருந்தாலொழிய, இச்சட்டத்தின்கீழ் இலங்கை மத்திய வங்கிக்கு வழங்கப்பட்ட பத்திரங்களை அல்லது வேறு கடப்பாடுகளை மீட்ப தில் நிதி என்னும் விடயம் குறித்தளிக்கப்பட்டுள்ள அமைச்சர் பணிக்கக்கூடியவாறாகக் காலத்துக்குக்காலம் பயன்படுத்தப் படுதலும் வேண்டும். *பெறுகைகள்.*

**7.** (1) நிதி என்னும் விடயம் குறித்தளிக்கப்பட்டுள்ள அமைச் சர், உறுப்புரைகளின் ஏற்பாடுகளினுள் எவற்றுக்கும் பயன் கொடுப்பதற்கு நியாயமானமுறையில் அவசியமென அவர் கருதக்கூடியவாறான கட்டளைகளை ஆக்கலாம். *கட்டளைகள்.*

(2) ஓராம் உட்பிரிவின்கீழ் ஆக்கப்பட்ட கட்டளை ஒவ்வொன்றும் வர்த்தமானியில் வெளியிடப்படுதல் வேண்டுமென்பதுடன், அத்தகைய வெளியீட்டுத் தேதியன்று நடைமுறைக்கு வருதலும் வேண்டும்.

(3) ஓராம் உட்பிரிவின்கீழ் ஆக்கப்பட்ட கட்டளை ஒவ்வொன்றும், அது வர்த்தமானியில் வெளியிடப்பட்ட பின்னர் வசதியான ளவு விரைவாக, பாராளுமன்றத்தின் அங்கீகாரத்துக்காக அதன் முன்னர் இடப்படுதல் வேண்டும். அவ்வாறு அங்கீகரிக்கப்படாத ஏதேனும் கட்டளை, அத்தகைய அங்கீகாரம் மறுக்கப்பட்ட தேதியிலிருந்து ஒழிக்கப்பட்டுள்ளதாகக் கருதப்படுதல் வேண்டும்.

(4) ஏதேனும் ஒழுங்குவிதி அவ்வாறு ஒழிக்கப்பட்டுள்ளதாகக் கருதப்படுகின்ற தேதிபற்றிய அறிவிப்பு வர்த்தமானியில் வெளியிடப்படுதல் வேண்டும்.

பொது ஏற்பாடுகள்.

**8**. நிதி என்னும் விடயம் குறித்தளிக்கப்பட்டுள்ள அமைச்சர், உடன்படிக்கையின்கீழ் இலங்கை அரசாங்கம் அதன் நிதிசார் கடப்பாடுகளை அல்லது பொறுப்புக்களைத் தீர்த்துவைப்பதற்கு அல்லது நிறைவேற்றுவதற்கு அதனை இயலச் செய்வதற்கு நியாயமான முறையில் அவசியமென அவர் கருதக்கூடியவாறான அத்தகைய எல்லா நடபடிகளையும் எடுக்கலாம் மற்றும் அத்தகைய எல்லா ஒழுங்கேற்பாடுகளையும் செய்யலாம்.

பொருள் கோடல்.

**9**. இச்சட்டத்தின் நோக்கங்களுக்காக —

"மத்திய வங்கி" என்பது, (422 ஆம் அத்தியாயமான) பணச் சட்டத்தின்கீழ் தாபிக்கப்பட்ட இலங்கை மத்திய வங்கி என்று பொருளாகும்.

ஒவ்வாமை ஏற்படும் விடயத்தில் சிங்கள உரை மேலோங்கி நிற்றல்.

**10**. இச்சட்டத்தின் சிங்கள, தமிழ் உரைகளுக்கிடையே ஏதேனும் ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில் சிங்கள உரையே மேலோங்கி நிற்றல் வேண்டும்.

***அட்டவணை*** [*பிரிவு 2*]

### ***ஆசிய உட்கட்டமைப்பு முதலீட்டு வங்கியின் (ஆஉமுவ) உடன்படிக்கை உறுப்புரைகள்***

*எந்த அரசாங்கத்தின் சார்பில் இவ்வுடன்படிக்கை கையொப்பமிடப் படுகின்றதோ அந்த அரசாங்கம்–*

*ஆசியாவிலுள்ள பொருளாதாரங்களின் வளர்ச்சியை நிலைபெறச்செய்வ தற்கும் பொருளாதார மற்றும் சமூக அபிவிருத்தியை மேம்படுத்துவதற்கும் உலகமயமாக்கலின் விடயத்தில் நிகழ்தகு நிதிசார் இக்கட்டுகளுக் கெதிராகவும் ஏனைய வெளிப்புற அதிர்ச்சிகளுக்கெதிராகவும் பிராந்திய நிலைமீட்டலுக்கு அதன்மூலம் பங்களிப்பதற்கும் பிராந்திய ஒத்துழைப்பின் முக்கியத்துவத்தைக்* **கவனத்துட்கொண்டும்;**

*பிராந்தியத் தொடர்புறுத்தத்தை விசாலிப்பதிலும் பிராந்திய ஒன்றிணைவைச் சீராக்குவதிலும், ஆசியாவிலுள்ள மக்களுக்கான பொருளாதார வளர்ச்சியை அதன்மூலம் மேம்படுத்தி சமூக அபிவிருத் தியை நிலைபெறச்செய்வதிலும், உலகளாவியரீதியிலான பொருளாதாரத் துரிதவளர்ச்சிக்குப் பங்களிப்பதிலும் உட்கட்டமைப்பு அபிவிருத்தியின் குறிப்பிடத்தக்கதன்மையை* **ஒப்புகை செய்தும்;**

*ஆசியாவில் உட்கட்டமைப்பு அபிவிருத்திக்கு நிதியளிப்பதற்கான பெருமளவு நீண்டகாலத் தேவையானது, ஏலவேயுள்ள பல்புடை அபிவிருத்தி வங்கிகளுக்கும் (இதனகத்துப்பின்னர் "வங்கி" எனக் குறிப்பீடு செய்யப்படும்) ஆசிய உட்கட்டமைப்பு முதலீட்டு வங்கிக்கும் இடையேயான பங்காண்மையொன்றின்மூலம் கூடுதலாகப் போதிய முறையில் தீர்த்துவைக்கப்படுமென்பதை* **உணர்ந்து கொண்டும்;**

*உட்கட்டமைப்பு அபிவிருத்தியை நோக்காகக்கொண்ட பல்புடை நிதிநிறுவனமொன்றாக வங்கியைத் தாபித்தலானது, ஆசியாவினுள் ளிருந்தும் அதற்கு வெளியேயிருந்தும் மிகவும் தேவையாகவுள்ள மேலதிக வளங்களைத் திரட்டுவதற்கும் ஆசியாவிலுள்ள தனிப்பட்ட பொருளா தாரங்கள் முகங்கொடுக்கவேண்டிய நிதியளிப்பு நெருக்குவாரங்களை அகற்றுவதற்கும் உதவுமென்றும் ஆசியாவில் நிலைபேறான, நிலைத்திருக்கும் வளர்ச்சியை மேம்படுத்துவதற்கு ஏலவேயுள்ள பல்புடை அபிவிருத்தி வங்கிகளுக்கு நிறைவுப்பாடளிக்குமென்றும்* **நம்பிக்கை கொண்டும்;**

*பின்வருவனவற்றுக்கிணங்கத் தொழிற்படவேண்டிய வங்கியைத் தாபிப்பதற்கு* **உடன்பட்டுள்ளது:**

## அத்தியாயம் I

### நோக்கமும், பணிகளும், உறுப்பாண்மையும்

**உறுப்புரை 1 — நோக்கம்**

*1.* வங்கியின் நோக்கம் பின்வருமாறாதல் வேண்டும்: (i) உட்கட்டமைப்பு மற்றும் வேறு உற்பத்தி ரீதியிலான துறைகளில் முதலீடு செய்வதன்மூலம் நிலைபெறுதகு பொருளாதார அபிவிருத்தியை வளர்த்தலும், செல் வத்தை உருவாக்குதலும், ஆசியாவில் உட்கட்டமைப்புத் தொடர் புறுத்தத்தைச் சீராக்குதலும்; அத்துடன் (ii)ஏனைய பல்புடை மற்றும் இருபுடை அபிவிருத்தி நிறுவனங்களுடன் நெருங்கிய ஒத்தாசையுடன் பணிபுரிவதன்மூலம் அபிவிருத்திச் சவால்களை எதிர்நோக்குவதில் பிராந்திய ஒத்துழைப்பையும் பங்காண்மையையும் மேம்படுத்துதலும்.

*2.* இவ்வுடன்படிக்கையில் பயன்படுத்தப்பட்டவிடத்தெல்லாம், "ஆசியா" மற்றும் "பிராந்தியம்" பற்றிய குறிப்பீடுகள், ஆளுநர் சபையினால் வேறுவகையாக முடிபுசெய்யப்பட்டவாறு தவிர, ஐக்கிய நாடுகள் சபையினால் ஆசியா மற்றும் ஓஷனியா என வகுப்பாக்கஞ் செய்யப்பட்ட புவியியல்சார் பிராந்தியங்களையும் அமைப்பையும் உள்ளடக்குதல் வேண்டும்.

**உறுப்புரை 2 — பணிகள்**

வங்கியானது அதன் நோக்கத்தை நடைமுறைப்படுத்துவதற்குப் பின்வரும் பணிகளைக் கொண்டிருத்தல் வேண்டும்:-

(i) குறிப்பாக உட்கட்டமைப்பு மற்றும் வேறு உற்பத்திரீதியிலான துறைகளின் அபிவிருத்திக்காக, அபிவிருத்தி நோக்கங்களுக் காகப் பகிரங்க மற்றும் தனியார் மூலதனத்தைப் பிராந்தி யத்தில் முதலீடு செய்வதனை மேம்படுத்துதல்;

(ii) முழுமையாகப் பிராந்தியத்தின் சுமுகமான பொருளாதார வளர்ச்சிக்கு மிக்க பயனுள்ளவகையில் பங்களிக்கும் அக்கருத்திட்டங்களும் நிகழ்ச்சித்திட்டங்களும் உட்படவும்

பிராந்தியத்தில் குறைவான அபிவிருத்தியடைந்துள்ள உறுப்பினர்களின் தேவைகளை விசேடமாகக் கருத்திற்கொண்டும், பிராந்தியத்தில் அத்தகைய அபிவிருத்திக்கு நிதியளிப்பதற்காக அதன் கையாளுகையிலுள்ள வளங்களைப் பயன்படுத்துதல்;

(iii) குறிப்பாக உட்கட்டமைப்பு மற்றும் ஏனைய உற்பத்திரீதியிலான துறைகளில், பிராந்தியத்தில் பொருளாதார அபிவிருத்திக்குப் பங்களிக்கும் கருத்திட்டங்களிலும், தொழில்முயற்சிகளிலும், செயற்பாடுகளிலும் தனியார் முதலீட்டை ஊக்குவித்தலும், நியாயமான நியதிநிபந்தனைகளின்மீது தனியார் மூலதனம் கிடைக்கக்கூடியதாகவிராதபோது தனியார் முதலீட்டைக் குறைநிரப்புதலும்; அத்துடன்

(iv) இப்பணிகளை முன்னெடுத்துச்செல்லக்கூடிய அத்தகைய வேறு செயற்பாடுகளைப் பொறுப்பேற்றலும் அத்தயை வேறு சேவைகளை வழங்குதலும்.

**உறுப்புரை 3 — உறுப்பாண்மை**

1. வங்கியிலான உறுப்பாண்மை, மீள்நிர்மாணம் மற்றும் அபிவிருத்திக்கான சர்வதேச வங்கியின் அல்லது ஆசிய அபிவிருத்தி வங்கியின் உறுப்பினர்களுக்குக் கிடைக்கக்கூடியதாதல் வேண்டும்.

(அ) பிராந்திய உறுப்பினர்கள், அட்டவணை அ வின் பாகம் அ வில் நிரற்படுத்தப்பட்ட அவ்வுறுப்பினர்களாகவும் 1 ஆம் உறுப்புரையின் 2 ஆம் பந்திக்கிணங்க ஆசியப் பிராந்தியத்தில் உள்ளடக்கப்பட்ட ஏனைய உறுப்பினர்களாகவும் இருத்தல் வேண்டும். ஏனைய எல்லா உறுப்பினர்களும் பிராந்தியச் சார்பற்ற உறுப்பினர்களாகவிருத்தல் வேண்டும்.

(ஆ) தாபக உறுப்பினர்கள், 57 ஆம் உறுப்புரையிற் குறித்துரைக்கப்பட்ட தேதியன்று அல்லது அத்தேதிக்கு முன்னர் இவ்வுடன்படிக்கையில் கையொப்பமிட்டிருக்கவேண்டியவையும் 58 ஆம் உறுப்புரையின் 1 ஆம் பந்தியின்கீழ் குறித்துரைக்கப்பட்ட இறுதித்தேதிக்கு முன்னர் உறுப்பாண்மையின் வேறெல்லா நிபந்தனைகளையும் நிறைவேற்றியிருக்கவேண்டியவையுமான அவ்வுறுப்பினர்களாகவிருத்தல் வேண்டும்.

2. ஐம்பத்தெட்டாம் உறுப்புரைக்கிணங்க, உறுப்பினர்களாகவராத மீள்நிர்மாணம் மற்றும் அபிவிருத்திக்கான சர்வதேச வங்கியின் அல்லது ஆசிய அபிவிருத்தி வங்கியின் உறுப்பினர்கள், வங்கி தீர்மானிக்க வேண்டிய அத்தகைய நியதிநிபந்தனைகளின்கீழ், 28 ஆம் உறுப்புரையில் ஏற்பாடு செய்யப்பட்டவாறாக ஆளுநர்சபையின் விசேட பெரும்பான்மை வாக்கின்மூலம் வங்கியிலான உறுப்பாண்மைக்குச் சேர்க்கப்படலாம்.

3. இறைமை கொண்டிராத அல்லது அதன் சர்வதேச தொடர்புகளை நடாத்துவதற்காகப் பொறுப்புள்ளதாகவிராத விண்ணப்பகாரரொரு வரின் விடயத்தில், வங்கியில் உறுப்பாண்மைக்கான விண்ணப்பம், வங்கியின் சர்வதேசத் தொடர்புகளுக்குப் பொறுப்பாகவுள்ள அதன் உறுப்பினர்களினால் முன்வைக்கப்படுதல் அல்லது உடன்பட்டுக்கொள் ளப்படுதல் வேண்டும்.

## அத்தியாயம் II

### மூலதனம்

**உறுப்புரை 4 — அதிகாரமளிக்கப்பட்ட மூலதனம்**

1. வங்கியின் அதிகாரமளிக்கப்பட்ட மூலதனப் பங்குத்தொகுதி, ஒவ்வொன்றும் 100,000 டொலர் ($100,000) என்ற சமப்பெறுமதியைக் கொண்ட ஒரு மில்லியன் (1,000,000) பங்குகளாகப் பிரிக்கப்பட்ட நூறு பில்லியன் ஐக்கிய அமெரிக்க நாடுகள் டொலராக ($100,000,000,000) இருத்தல் வேண்டும்; 5 ஆம் உறுப்புரையின் ஏற்பாடுகளுக்கிணங்க உறுப்பினர்களினால் ஒப்பப்பணத்துக்காக மட்டுமே இது கிடைக்கக் கூடியதாதல் வேண்டும்.

2. தொடக்க அதிகாரமளிக்கப்பட்ட மூலதனப் பங்குத்தொகுதி, பங்குவகையாகச் செலுத்தப்பட்ட பங்குகளாகவும் அழைக்கப்படற்பாலன வான பங்குகளாகவும் பிரிக்கப்படுதல் வேண்டும். இருபது பில்லியன் ($20,000,000,000) டொலர் என்ற கூட்டுமொத்தச் சமப்பெறுமதியைக் கொண்ட பங்குகள், பங்குவகையாகச் செலுத்தப்பட்ட பங்குகளாகவிருத்தல் வேண்டுமெனபதுடன், எண்பது பில்லியன் ($80,000,000,000) டொலர் என்ற கூட்டுமொத்தச் சமப்பெறுமதியைக்கொண்ட பங்குகள் அழைக்கப் படற்பாலனவாகவிருத்தலும் வேண்டும்.

*3*. வங்கியின் அதிகாரமளிக்கப்பட்ட மூலதனப் பங்குத்தொகுதி, பங்குவகையாகச் செலுத்தப்பட்ட மற்றும் அழைக்கப்படற்பாலனவான பங்குகளுக்கிடையேயான விகிதாசாரமுட்பட, சாதுரியமானவையென அது கருதக்கூடியவாறான அத்தகைய நேரத்திலும் அத்தகைய நியதிநிபந்தனைகளின்கீழும், *28*ஆம் உறுப்புரையில் ஏற்பாடுசெய்யப்பட்டவாறாக மீயுயர் பெரும்பான்மை வாக்கின்மூலம் ஆளுநர் சபையினால் அதிகரிக்கப்படலாம்.

*4*. இவ்வுடன்படிக்கையில் பயன்படுத்தப்பட்டவிடத்தெல்லாம் "டொலர்" என்னும் பதமும் "$" என்னும் அடையாளமும் ஐக்கிய அமெரிக்க நாடுகளின் அலுவலகமுறையான கொடுப்பனவு நாணயமாகவுள்ளதெனப் புரிந்துகொள்ளப்படுதல் வேண்டும்.

**உறுப்புரை 5 — பங்குகளின் ஒப்பப்பணம்**

*1*. ஒவ்வோர் உறுப்பினரும் வங்கியின் மூலதனப் பங்குத்தொகுதியின் பங்குகளுக்கு ஒப்பப்பணம் செலுத்துதல் வேண்டும். தொடக்க அதிகாரமளிக்கப்பட்ட மூலதனப் பங்குத்தொகுதிகளான ஒவ்வோர் ஒப்பப்பணமும், இரண்டுக்கு *(2)* எட்டு *(8)* என்ற விகிதாசாரத்தில் பங்குவகையாகச் செலுத்தப்பட்ட பங்குகளுக்காகவும் அழைக்கப்படற்பாலனவான பங்குகளுக்காகவும் இருத்தல் வேண்டும். 58 ஆம் உறுப்புரைக்கிணங்க உறுப்பினர்களாக வருகின்ற நாடுகளினால் ஒப்பப்பணமாகச் செலுத்தப்படுவதற்குக் கிடைக்கக்கூடிய பங்குகளின் தொடக்க எண்ணிக்கை, அட்டவணை அ வில் எடுத்துக்கூறப்பட்டதாதல் வேண்டும்.

*2*. உறுப்புரை *3* இன் *2* ஆம் பந்திக்கிணங்க உறுப்பாண்மைக்குச் சேர்க்கப்பட்ட நாடுகளினால் ஒப்பப்பணமாகச் செலுத்தப்படவேண்டிய பங்குகளின் ஆரம்ப எண்ணிக்கை ஆளுநர் சபையினால் தீர்மானிக்கப்படுதல் வேண்டும்; ஆயின், எவ்வாறாயினும், *28* ஆம் உறுப்புரையில் ஏற்பாடுசெய்யப்பட்டவாறாக மீயுயர் பெரும்பான்மை வாக்கின் மூலம் ஆளுநர் சபையினால் வேறுவகையாக உடன்பட்டுக்கொள்ளப்பட்டாலொழிய, மொத்த ஒப்பப்பணமாகச் செலுத்தப்பட்ட மூலதனப் பங்குத்தொகுதியின் எழுபத்தைந்து (75) சதவீதத்துக்குக் குறைவான பிராந்திய உறுப்பினர்களினால் வைத்திருக்கப்பட்ட மூலதனப் பங்குத்தொகுதியின் நூற்றுவீதத்தைக் குறைக்கும் பயனைக்கொண்டிருக்கும் அத்தகைய ஒப்பப்பணமெதுவும் அதிகாரமளிக்கப்படுதலாகாது.

3. ஆளுநர் சபை, ஓர் உறுப்பினரின் வேண்டுகோளின்பேரில், 28 ஆம் உறுப்புரையில் ஏற்பாடுசெய்யப்பட்டவாறாக மீயுயர் பெரும்பான்மை வாக்கின்மூலம் சபை தீர்மானிக்கக்கூடியவாறான அத்தகைய நியதி நிபந்தனைகளின்மீது அத்தகைய உறுப்பினரின் ஒப்பப்பணத்தை அதிகரிக்கலாம்; ஆயின், எவ்வாறாயினும், 28 ஆம் உறுப்புரையில் ஏற்பாடுசெய்யப்பட்டவாறாக மீயுயர் பெரும்பான்மை வாக்கின் மூலம் ஆளுநர் சபையினால் வேறுவகையாக உடன்பட்டுக்கொள்ளப்பட்டாலொழிய, மொத்த ஒப்பப்பணமாகச் செலுத்தப்பட்ட மூலதனப் பங்குத்தொகுதியின் எழுபத்தைந்து (75) சதவீதத்துக்குக் குறைவான பிராந்திய உறுப்பினர்களினால் வைத்திருக்கப்பட்ட மூலதனப் பங்குத்தொகுதியின் நூற்றுவீதத்தைக் குறைக்கும் பயனைக்கொண்டிருக்கும் எவரேனும் உறுப்பினரின் ஒப்பப்பணத்திலான அத்தகைய அதிகரிப்பெதுவும் அதிகாரமளிக்கப்படுதலாகாது.

4. ஆளுநர்சபை, ஐந்து (5) ஆண்டுகளுக்கு மேற்படாத கால இடைவெளிகளில் வங்கியின் மூலதனப் பங்குத்தொகுதியைப் பரிசீலனை செய்தல் வேண்டும். அதிகாரமளிக்கப்பட்ட மூலதனப் பங்குத்தொகுதியிலான அதிகரிப்பொன்றின் விடயத்தில், அதுகாலவரை ஒப்பப்பணமாகச் செலுத்தப்பட்ட அதன் பங்குத்தொகுதி, அப்பங்குத்தொகுதியின் அதிகரிப்புக்கு நேர்முன்னர் மொத்த ஒப்பப்பணமாகச் செலுத்தப்பட்ட மூலதனப் பங்குத்தொகுதிக்கு எந்த விகிதாசாரத்தைக் கொண்டுள்ளதோ அந்த விகிதாசாரத்துக்குச் சமமான அத்தகைய அதிகரிப்பின் ஒரு விகிதாசாரத்துக்கு, ஆளுநர்சபை தீர்மானிக்கவேண்டியவாறான அத்தகைய நியதிநிபந்தனைகளின்கீழ் ஒப்பப்பணம் செலுத்துவதற்கு ஒவ்வோர் உறுப்பினரும் நியாயமான வாய்ப்பைக் கொண்டிருத்தல் வேண்டும். மூலதனப் பங்குத்தொகுதியிலான அதிகரிப்பின் ஏதேனும் பாகத்துக்கு ஒப்பப்பணம் செலுத்துவதற்கு உறுப்பினரெவரும் கடப்பாடுடையவராதலாகாது.

### உறுப்புரை 6 — ஒப்பப்பணங்களின் கொடுப்பனவு

1. வங்கியின் செலுத்தப்பட்ட மூலதனப் பங்குத்தொகுதிக்கு 58ஆம் உறுப்புரைக்கிணங்க உறுப்பினரொருவராக வருகின்ற இவ்வுடன்படிக்கைக்கான ஒவ்வொரு கையொப்பமிடுநரினாலும் ஆரம்பத்தில் ஒப்பப்பணமாகச் செலுத்தப்பட்ட தொகையின் கொடுப்பனவு, இவ்வுறுப்புரையின் 5ஆம் பந்தியில் ஏற்பாடுசெய்யப்பட்டவாறுதவிர, அத்தகைய தொகை ஒவ்வொன்றினதும் இருபது (20) சதவீதமான ஐந்து (5) தவணைப்பணங்களில் செய்யப்படுதல் வேண்டும். முதலாவது தவணைப்பணமானது, ஒவ்வோர் உறுப்பினரினாலும் இவ்வுடன்

படிக்கை வலுவுக்கு வந்த பின்னர் முப்பது (30) நாட்களினுள், அல்லது 58ஆம் உறுப்புரையின் 1ஆம் பந்திக்கிணங்க அதன் ஏற்புறுதி, ஏற்றுக் கொள்கை அல்லது அங்கீகாரச் சாதனம் அதன்சார்பில் வைப்பிடப்பட்ட தேதியன்று அல்லது அதற்கு முன்னர், எது பிந்தியதோ அதில், செலுத்தப் படுதல் வேண்டும். இரண்டாவது தவணைப்பணமானது, இவ்வுடன் படிக்கை வலுவுக்குவருவதிலிருந்து ஓர் (1) ஆண்டுக்குப் பின்னர் வருமதி யாகவருதல் வேண்டும். எஞ்சியுள்ள மூன்று (3) தவணைப்பணங்களும், முற்போந்த தவணைப்பணம் எந்தத் தேதியன்று வருமதியாக வருகின்றதோ அந்தத் தேதியிலிருந்து ஓர் (1) ஆண்டுக்குப் பின்னர் அடுத்தடுத்து வருமதியாக வருதல் வேண்டும்.

2. தொடக்கத்தில் செலுத்தப்பட்ட மூலதனப் பங்குத்தொகுதிக்கு ஆரம்ப ஒப்பப்பணங்களின் கொடுப்பனவினது ஒவ்வொரு தவணைப்பணமும், இவ்வுறுப்புரையின் 5ஆம் பந்தியில் ஏற்பாடுசெய்யப்பட்டவாறுதவிர, டொலர்களில் அல்லது வேறு மாற்றத்தகு நாணயத்தில் செலுத்தப்படுதல் வேண்டும். வங்கியானது எந்நேரத்திலும் அத்தகைய கொடுப்பனவுகளை டொலர்களாக மாற்றலாம். எந்தப் பங்குவகையாகச் செலுத்தப்பட்ட மற்றும் இணைந்துள்ள அழைக்கப்படற்பாலனவான பங்குகளுக்காக அத்தகைய கொடுப்பனவுகள் வருமதியாகவுள்ளனவோ ஆனால் பெறப்படாதுள்ள னவோ அந்தப் பங்குவகையாகச் செலுத்தப்பட்ட மற்றும் இணைந்துள்ள அழைக்கப்படற்பாலனவான பங்குகள் தொடர்பில் பெறப்பட்ட, வாக்களிக்கும் உரிமைகளுட்பட்ட எல்லா உரிமைகளும், வங்கியினால் முழுக்கொடுப்பனவும் பெறப்படும் வரை இடைநிறுத்தப்படுதல் வேண்டும்.

3. வங்கியின் அழைக்கப்படற்பாலதான மூலதனப் பங்குத்தொகுதிக்கு ஒப்பப்பணமாகச் செலுத்தப்பட்ட தொகையின் கொடுப்பனவு வங்கியின் பொறுப்புக்களைத் தீர்த்துவைப்பதற்கு அதனால் தேவைப்படுகின்ற வாறும் தேவைப்படுகின்றபோதும் அழைக்கப்படுவதற்கு மட்டுமே அமைந்ததாதல் வேண்டும். அத்தகையவோர் அழைப்புச்செய்யப்படும் பட்சத்தில், அழைப்பானது எந்நோக்கத்துக்காகச் செய்யப்படுகின்றதோ அந்நோக்கத்துக்காக டொலர்களில் அல்லது வங்கியின் கடப்பாடுகளை நிறைவேற்றுவதற்குத் தேவைப்பட்ட நாணயத்தில் கொடுப்பனவு செய்யப்படலாம். செலுத்தப்படாத ஒப்பப்பணங்களின் மீதான அழைப்புக் கள், அழைக்கப்படற்பாலனவான பங்குகளின் மீது நூற்று வீதத்தில் ஒரு சீரானதாகவிருத்தல் வேண்டும்.

4. வங்கியானது, இவ்வுறுப்புரையின் கீழான ஏதேனும் கொடுப்பன வுக்கான இடத்தைத் தீர்மானித்தல் வேண்டும்; ஆயின், ஆளுநர் சபையின் அங்குரார்ப்பணக் கூட்டம்வரை, இவ்வுறுப்புரையின் 1ஆம் பந்தியில் குறிப்பீடுசெய்யப்பட்ட முதலாவது தவணைப்பணம், வங்கிக்கான நம்பிக்கைப்பொறுப்பாளரென்ற முறையில் சீன மக்கள் குடியரசின் அரசாங்கத்துக்குச் செலுத்தப்படுதல் வேண்டும்.

5. இப்பந்தியின் நோக்கங்களுக்காகக் குறைந்த அபிவிருத்தியடைந் துள்ள நாடாகக் கருதப்பட்ட உறுப்பினரொன்று, இவ்வுறுப்புரையின் 1 ஆம், 2 ஆம் பந்திகளின்கீழான அதன் ஒப்பப்பணத்தை, மாற்றாக, ஒன்றில்:

(அ) பத்து (10) தவணைப் பணங்கள் வரை முழுமையாக டொலர்களில் அல்லது வேறு மாற்றத்தகு நாணயத்தில் செலுத்தலாம்; அத்தகைய ஒவ்வொரு தவணைப்பணமும் மொத்தத் தொகையின் (10) சதவீதத்துக்குச் சமமாகவிருத்தல் வேண்டும்; முதலாவது மற்றும் இரண்டாவது தவணைப் பணங்கள், 1 ஆம் பந்தியில் ஏற்பாடுசெய்யப்பட்டவாறு வருமதியாகவிருத்தலும், மூன்றாவது முதல் பத்தாவது வரையிலான தவணைப்பணங்கள் இவ்வுடன்படிக்கை வலுவுக்குவருகின்ற இரண்டாவது மற்றும் அடுத்துப்பின்ன ரான ஆண்டு நிறைவுத்தேதிகளில் வருமதியாகவிருத்தலும் வேண்டும்; அல்லது

(ஆ) இவ்வுறுப்புரையின் 1 ஆம் பந்தியில் தரப்பட்ட தவணைப் பணங்களின் அட்டவணையைப் பின்பற்றி, ஒருபாகத்தை டொலர்களிலும் அல்லது வேறு மாற்றத்தகு நாணயத்திலும் ஒவ்வொரு தவணைப்பணத்தினதும் ஐம்பது (50) சதவீதம் வரையிலான ஒருபாகத்தை உறுப்பினரின் நாணயத்திலும் செலுத்தலாம். இவ்வுட்பந்தி (ஆ) வின் கீழான கொடுப்பனவு களுக்குப் பின்வரும் ஏற்பாடுகள் ஏற்புடையனவாதல் வேண் டும்:

(i) உறுப்பினரின் சொந்த நாணயத்தில் செய்யப்பட வேண்டிய கொடுப்பனவுகளின் விகிதாசாரம் பற்றி இவ்வுறுப்புரையின் 1 ஆம் பந்தியின் கீழான ஒப்பப் பணம் செலுத்தப்படும் நேரத்தில் வங்கிக்கு அது அறிவித்தல் வேண்டும்.

(ii) இந்த 5 ஆம் பந்தியின் கீழ் உறுப்பினரொருவரின் சொந்த நாணயத்தில் அதன் ஒவ்வொரு கொடுப்பனவும் செலுத்தப்படுகின்ற ஒப்பப்பணத்தினது பாகத்தின் டொலர்களின்படி முழுப் பெறுமதிக்கும் சமமானதென வங்கி தீர்மானிக்கின்றவாறான அத்தகைய தொகையிலிருத்தல் வேண்டும். ஆரம்பக் கொடுப்பனவு, இதன்கீழ் உறுப்பினர் தோதானதெனக் கருதுகின்றவாறான அத்தகைய தொகையிலிருத்தல் வேண்டும் ஆனால் அத்தகைய கொடுப்பனவின் முழுமையான டொலருக்குச் சமமானதாக அமைவதற்கு அவசியமாகவுள்ளதென வங்கி தீர்மானிக்கவேண்டியவாறு, அக்கொடுப்பனவு வருமதியாகவிருந்த தேதியிலிருந்து தொண்ணூறு (90) நாட்களினுள் செய்யப்படவேண்டிய அத்தகைய சீராக்குதலுக்கு அமைந்ததாதல் வேண்டும்.

(iii) வங்கியின் அபிப்பிராயத்தில் உறுப்பினரொருவரினது நாணயத்தின் வெளிநாட்டுச் செலாவணிப் பெறுமதி குறிப்பிடத்தக்க அளவுக்கு மதிப்பிறக்கமடைந்துள்ளபோதெல்லாம், அவ்வுறுப்பினர், நியாயமான காலத்தினுள், அதன் ஒப்பப்பணத்தின் காரணமாக வங்கியினால் வைத்திருக்கப்பட்ட அத்தகைய எல்லா நாணயத்தினதும் பெறுமதியைப் பேணுவதற்குத் தேவைப்பட்ட அதன் நாணயத்தின் மேலதிகத் தொகையொன்றை வங்கிக்குச் செலுத்துதல் வேண்டும்.

(iv) வங்கியின் அபிப்பிராயத்தில் உறுப்பினரொருவரினது நாணயத்தின் வெளிநாட்டுச் செலாவணிப் பெறுமதி குறிப்பிடத்தக்க அளவுக்கு மதிப்பேற்றமடைந்துள்ளபோதெல்லாம், வங்கியானது, அவ்வுறுப்பினருக்கு, நியாயமான காலத்தினுள், அதன் ஒப்பப்பணத்தின்காரணமாக வங்கியினால் வைத்திருக்கப்பட்ட அத்தகைய எல்லா நாணயத்தினதும் பெறுமதியைச் சீராக்குவதற்குத் தேவைப்பட்ட அந்நாணயத்தின் தொகையொன்றை அவ்வுறுப்பினருக்குச் செலுத்துதல் வேண்டும்.

(v) வங்கியானது, (iii) ஆம் உட்பந்தியின் கீழான கொடுப்பனவுக்கான அதன் உரிமைகளை விட்டுக் கொடுக்கலாமென்பதுடன், உறுப்பினர், (iv) ஆம் உட்பந்தியின்கீழான கொடுப்பனவுக்கான அதன் உரிமைகளையும் விட்டுக்கொடுக்கலாம்.

6. வங்கியானது இவ்வுறுப்புரையின் உட்பந்தி 5(ஆ) என்பதன்கீழ் அதன் ஒப்பப்பணத்தைச் செலுத்துகின்ற எவரேனும் உறுப்பினரின் நாணயத்தில் செலுத்தப்படவேண்டிய தொகைக்குப் பதிலாக, அவ்வுறுப் பினரின் அரசாங்கத்தினால், அல்லது அத்தகைய உறுப்பினரினால் பெயர்குறிக்கப்பட்ட வைப்பகத்தினால் வழங்கப்பட்ட வாக்குறுதிப்பத் திரங்களை அல்லது வேறு கடப்பாடுகளை அவ்வுறுப்பினரிடமிருந்து ஏற்றுக்கொள்ளுதல் வேண்டும்; ஆயின், அத்தகைய தொகை, வங்கியின் தொழிற்பாடுகளை நடாத்துவதற்கு அதனால் தேவைப்படாதிருத்தல் வேண்டும். அத்தகைய பத்திரங்கள் அல்லது கடப்பாடுகள் கைமாற்றத்தக் கனவல்லாதவையும், வட்டியீட்டாதவையும், கோரிக்கையின்மேல் சமப்பெறுமதியில் வங்கிக்குச் செலுத்தப்படற்பாலவையுமாக இருத்தல் வேண்டும்.

**உறுப்புரை 7 — பங்குகளின் நியதிகள்**

1. உறுப்பினர்களினால் ஆரம்பத்தில் ஒப்பப்பணமாகச் செலுத்தப்பட்ட பங்குத்தொகுதியின் பங்குகள் முகப்பெறுமதியில் வழங்கப்படுதல் வேண்டும். ஏனைய பங்குகள் 28ஆம் உறுப்புரையில் ஏற்பாடுசெய்யப்பட்ட வாறான விசேட பெரும்பான்மை வாக்கின் மூலம் ஆளுநர் சபை விசேட சூழ்நிலைகளில் வேறு நியதிகளின்மீது அவற்றை வழங்குவதற்கு முடிபு செய்தாலொழிய, முகப்பெறுமதியில் வழங்கப்படுதல் வேண்டும்.

2. பங்குத்தொகுதியின் பங்குகள், எத்தகையதுமான எம்முறையிலே னும் அடைமானம் வைக்கப்படுதலோ அல்லது வில்லங்கத்துக்குட் படுத்தப்படுதலோ ஆகாதென்பதுடன், அவை வங்கிக்கு மட்டுமே கைமாற் றத்தக்கனவாதலும் வேண்டும்.

3. பங்குகள்மீது உறுப்பினர்களின் பொறுப்பு, அவற்றின் வழங்குகை விலையின் செலுத்தப்படாத பாகத்துக்கு வரையறுக்கப்படுதல் வேண்டும்.

4. உறுப்பினரெதுவும், அதன் உறுப்பாண்மை காரணமாக, வங்கியின் கடப்பாடுகளுக்காக ஆளாதலாகாது.

***உறுப்புரை 8 — சாதாரண வளங்கள்***

*இவ்வுடன்படிக்கையில் பயன்படுத்தப்பட்டவாறு, வங்கியின் "சாதாரண வளங்கள்" என்ற பதம் பின்வருவனவற்றை உள்ளடக்குதல் வேண்டும்:*

(i) *5ஆம் உறுப்புரையைப் பின்பற்றி ஒப்பப்பணமாகச் செலுத்தப்பட்டதான, பங்குவகையாகச் செலுத்தப்பட்ட மற்றும் அழைக்கப்படற்பாலனவான பங்குகள் ஆகிய இரண்டுமுட்பட, வங்கியின் அதிகாரமளிக்கப்பட்ட மூலதனப்பங்குத்தொகுதி;*

(ii) *16ஆம் உறுப்புரையின் 1 ஆம் பந்தியினால் அளிக்கப்பட்ட தத்துவங்களின் பயனைக்கொண்டு வங்கியினால் திரட்டப்பட்டவையும், 6 ஆம் உறுப்புரையின் 3 ஆம் பந்தியில் ஏற்பாடு செய்யப்பட்ட அழைப்புகளுக்கான பொறுப்பு ஏற்புடையற்பாலதாகவுள்ளவையுமான நிதிகள்;*

(iii) *கடன்களின் மீள்கொடுப்பனவாகப் பெறப்பட்ட நிதிகள் அல்லது இவ்வுறுப்புரையின்* (i)*ஆம்,* (ii)*ஆம் உட்பந்திகளிற் சுட்டிக்காட்டப்பட்ட வளங்களைக்கொண்டு அல்லது ஒப்புரவு முதலீடுகளின் மீதான திரும்பல்களாக அளிக்கப்பட்ட உத்தரவாதங்கள் மற்றும் அத்தகைய வளங்களைக்கொண்டு செய்யப்பட்டவையும் 11 ஆம் உறுப்புரையின் உட்பந்தி 2* (vi) *இன்கீழ் அங்கீகரிக்கப்பட்டவையுமான வேறு வகையினவான நிதியளிப்புகள்;*

(iv) *மேற்குறிப்பிடப்பட்ட நிதிகளிலிருந்து அளிக்கப்பட்ட கடன்களிலிருந்து அல்லது 6ஆம் உறுப்புரையின் 3ஆம் பந்தியில் எடுத்துக்கூறப்பட்ட அழைப்புகளுக்கான பொறுப்பு அவற்றுக்கு ஏற்புடையதாகவுள்ள உத்தரவாதங்களிலிருந்து பெறப்பட்ட வருமானம்; அத்துடன்*

(v) *இவ்வுடன்படிக்கையின் 17 ஆம் உறுப்புரையிற் குறிப்பீடு செய்யப்பட்ட வங்கியின் விசேட நிதி வளங்களின் பாகமாக அமையாதவையும் அதனால் பெறப்பட்டவையுமான வேறெவையேனும் நிதிகள் அல்லது வருமானம்.*

## அத்தியாயம் III

**வங்கியின் தொழிற்பாடுகள்**

**உறுப்புரை 9 — வளங்களைப் பயன்படுத்துதல்**

வங்கியின் வளங்களும் வசதிகளும், 1ஆம், 2ஆம் உறுப்புரைகளில் முறையே எடுத்துக்கூறப்பட்ட நோக்கத்தையும் பணிகளையும் புறநீங்கலாக நடைமுறைப்படுத்துவதற்கும் உறுதியான வங்கித்தொழில் நெறிகளுக்கு இணங்கவும் பயன்படுத்தப்படுதல் வேண்டும்.

**உறுப்புரை 10 — சாதாரண மற்றும் விசேட தொழிற்பாடுகள்**

1. வங்கியின் தொழிற்பாடுகள் பின்வருவனவற்றைக் கொண்டிருத்தல் வேண்டும்:

(i) 8ஆம் உறுப்புரையில் குறிப்பீடு செய்யப்பட்ட, வங்கியின் சாதாரண வளங்களிலிருந்து நிதியளிக்கப்பட்ட சாதாரணத் தொழிற்பாடுகள்; அத்துடன்

(ii) 17ஆம் உறுப்புரையில் குறிப்பீடு செய்யப்பட்ட விசேட நிதிய வளங்களிலிருந்து நிதியளிக்கப்பட்ட விசேட தொழிற்பாடுகள்.

இருவகையினவான தொழிற்பாடுகளும் அதே கருத்திட்டத்தின் அல்லது நிகழ்ச்சித்திட்டத்தின் அம்சங்களுக்குத் தனிவேறாக நிதியளிக்கலாம்.

2. வங்கியின் சாதாரண வளங்களும் விசேட நிதியவளங்களும் எல்லா நேரங்களிலும் எல்லாம் தொடர்பிலும் ஒவ்வொன்றிலிருந்தும் முழுமையாகத் தனிவேறாக வைத்திருக்கப்படுதல், பயன்படுத்தப்படுதல், ஈடுபடுத்தப்படுதல், முதலீடு செய்யப்படுதல் அல்லது வேறுவகையாகக் கையுதிர்க்கப்படுதல் வேண்டும். வங்கியின் நிதிக்கூற்றுக்கள், சாதாரணத் தொழிற்பாடுகளையும் விசேட தொழிற்பாடுகளையும் தனிவேறாகக் காட்டுதல் வேண்டும்.

3. வங்கியின் சாதாரண வளங்கள், எச்சூழ்நிலைகளின்கீழும், விசேட நிதியவளங்கள் எந்த விசேட தொழிற்பாடுகளுக்காக அல்லது வேறு செயற்பாடுகளுக்காகத் தொடக்கத்தில் பயன்படுத்தப்பட்டனவோ அல்லது ஈடுபடுத்தப்பட்டனவோ அந்த விசேட தொழிற்பாடுகளிலிருந்து

அல்லது வேறு செயற்பாடுகளிலிருந்து எழுகின்ற நட்டங்கள் அல்லது பொறுப்புக்கள் பொறுப்பிக்கப்படுவதற்கு அல்லது அவற்றைக் கொடுத்துத்தீர்ப்பதற்குப் பயன்படுத்தப்படுதல் ஆகாது.

*4.* சாதாரணத் தொழிற்பாடுகளுடன் நேரடியாக இணைந்துள்ள செலவுகள் வங்கியின் சாதாரண வளங்களுக்குப் பொறுப்பிக்கப்படுதல் வேண்டும். விசேட தொழிற்பாடுகளுடன் நேரடியாக இணைந்துள்ள செலவுகள், விசேட நிதியவளங்களுக்குப் பொறுப்பிக்கப்படுதல் வேண்டும். வேறெவையேனும் செலவுகள், வங்கி தீர்மானிக்கவேண்டியவாறாகப் பொறுப்பிக்கப்படுதல் வேண்டும்.

**உறுப்புரை *11* — பெறுநர்களும் தொழிற்பாட்டு முறைகளும்**

*1.* (அ) வங்கியானது எவரேனும் உறுப்பினருக்கு அல்லது அதன் ஏதேனும் முகவர்நிலையத்துக்கு, நிமித்தநிறுவகத்துக்கு அல்லது அதன் அரசியல் உட்பிரிவுக்கு அல்லது ஓர் உறுப்பினரின் ஆள்புலத்தில் தொழிற்படுகின்ற ஏதேனும் உருவகத்துக்கு அல்லது தொழில்முயற்சிக்கு, மற்றும் பிராந்தியத்தின் பொருளாதார அபிவிருத்தியுடன் சம்பந்தப்பட்ட சர்வதேச அல்லது பிராந்திய முகவர்நிலையங்களுக்கு அல்லது உருவகங்களுக்கு நிதியளிப்பை வழங்கலாம் அல்லது வழங்குவதற்கு வசதியளிக்கலாம்.

(ஆ) வங்கியானது, விசேட சூழ்நிலைகளில், ஆளுநர்சபை *28*ஆம் உறுப்புரையில் ஏற்பாடுசெய்யப்பட்டவாறாக மீயுயர் பெரும்பான்மை வாக்கின் மூலம் பின்வருமாறு செய்திருந்தாலொழிய மட்டுமே மேலே உட்பந்தி (அ) வில் நிரற்படுத்தப்படாத பெறுநருக்கு உதவிவழங்கலாம்: (i) அத்தகைய உதவி, நோக்கத்தை நிறைவேற்றுவதற்குத் திட்டமிடப்பட்டுள்ளதென்றும், வங்கியின் பணிகளினுள் வருகின்றதென்றும், வங்கியினது உறுப்பாண்மையின் நலனுக்குகந்ததென்றும் தீர்மானித்திருத்தல் வேண்டும்; அத்துடன் (ii) அத்தகைய பெறுநருக்கு வழங்கப்படக்கூடிய இவ்வுறுப்புரையின் *2*ஆம் பந்தியின் கீழான உதவியின் வகைகளைக் குறித்துரைத்தல் வேண்டும்.

*2.* வங்கியானது அதன் தொழிற்பாடுகளைப் பின்வரும் எவையேனும் வழிகளில் நிறைவேற்றலாம்:-

(i) நேரடிக் கடன்களை வழங்குதல், அவற்றுக்குக் கூட்டாக நிதியளித்தல் அல்லது அவற்றில் பங்குபற்றுதல் என்பன மூலம்;

(ii) ஒரு நிறுவனத்தின் அல்லது தொழில்முயற்சியின் ஒப்புரவு மூலதனத்தில் நிதிகளை முதலீடு செய்தல் மூலம்;

(iii) முதனிலை அல்லது இரண்டாந்நிலைக் கடப்பாட்டாளராக வாயினுஞ்சரி, பொருளாதார அபிவிருத்திக்கான கடன்களுக்கு முழுமையாக அல்லது பகுதியளவில் உத்தரவாதமளித்தல் மூலம்;

(iv) விசேட நிதிய வளங்களின் பயன்பாட்டைத் தீர்மானிக்கும் உடன்படிக்கைகளுக்கிணங்க அவற்றைப் பரந்து ஈடுபடுத்துதல் மூலம்;

(v) 15ஆம் உறுப்புரைக்கிணங்கத் தொழினுட்ப உதவியை வழங்குதல் மூலம்; அல்லது

(vi) 28 ஆம் உறுப்புரையில் ஏற்பாடுசெய்யப்பட்டவாறு விசேட பெரும்பான்மை வாக்கின்மூலம் ஆளுநர் சபையினால் தீர்மானிக்கப்படக்கூடியவாறான வேறு வகையினவான நிதியளிப்பினூடாக.

**உறுப்புரை 12 — சாதாரணத் தொழிற்பாடுகளின் மீதான வரையறைகள்**

1. பதினோராம் உறுப்புரையின் உட்பந்திகள் 2 (i), (ii), (iii) மற்றும் (vi) இன் கீழ் வங்கியின் சாதாரணத் தொழிற்பாடுகளில் அதனால் வழங்கப்பட்ட கடன்கள், ஒப்புரவு முதலீடுகள், உத்தரவாதங்கள் மற்றும் வேறு வகையினவான நிதியளிப்பு என்பவற்றின் நிலுவையாகவுள்ள மொத்தத் தொகை, அதன் சாதாரண வளங்களில் உள்ளடக்கப்பட்ட அதன் பாதிக்கப்படாத ஒப்பப்பணமாகச் செலுத்தப்பட்ட மூலதனம், ஒதுக்குகள் மற்றும் வைத்திருக்கப்பட்ட ஈட்டுகைகள் அத்தகைய அதிகரிப்பின் மூலம் விஞ்சப்படுமாயின், எந்நேரத்திலும் அதிகரிக்கப்படலாகாது. முற்போந்த வசனத்தின் ஏற்பாடுகள் எவ்வாறிருப்பினும், ஆளுநர் சபை 28ஆம் உறுப்புரையில் ஏற்பாடுசெய்யப்பட்டவாறாக மீயுயர் பெரும்பான்மை வாக்கின்மூலம், வங்கியின் நிதிநிலைமை மற்றும் நிதி அந்தஸ்து என்பவற்றின் அடிப்படையில், இப்பந்தியின் கீழான வரையறையானது,

வங்கியின் சாதாரண வளங்களில் உள்ளடக்கப்பட்ட அதன் பாதிக்கப் படாத ஒப்பப்பணமாகச் செலுத்தப்பட்ட மூலதனம், ஒதுக்குகள் மற்றும் வைத்திருக்கப்பட்ட ஈட்டுகைகளின் 250% வரை அதிகரிக்கப்படலாமெனத் தீர்மானிக்கலாம்.

2. வங்கியின் செலுத்தீடுசெய்யப்பட்ட ஒப்புரவு முதலீடுகளின் தொகை, எந்நேரத்திலும், அதன் மொத்தப் பாதிக்கப்படாத செலுத்தப்பட்ட ஒப்பப் பணமாகச் செலுத்தப்பட்ட மூலதனம் மற்றும் பொது ஒதுக்குகளுடன் தொடர்புபட்ட தொகையை விஞ்சுதலாகாது.

**உறுப்புரை 13 — தொழிற்பாட்டு நெறிகள்**

வங்கியின் தொழிற்பாடுகள், கீழே தரப்பட்டுள்ள நெறிகளுக்கிணங்க நடாத்தப்படுதல் வேண்டும் :-

1. வங்கி அதன் தொழிற்பாடுகளில் உறுதியான வங்கித்தொழில் நெறிகளினால் வழிகாட்டப்படுதல் வேண்டும்.

2. வங்கியின் தொழிற்பாடுகள், குறித்த கருத்திட்டங்களுக்கு அல்லது குறித்த முதலீட்டு நிகழ்ச்சித்திட்டங்களுக்கு நிதியளிப்பதற்காக, ஒப்புரவு முதலீட்டுக்காக, மற்றும் 15 ஆம் உறுப்புரைக்கிணங்கத் தொழினுட்ப உதவிக்காகப் பிரதானமாக ஏற்பாடு செய்தல் வேண்டும்.

3. வங்கியானது, உறுப்பினரொன்றின் ஆள்புலத்திலுள்ள ஏதேனும் பொறுப்புமுயற்சிக்கு நிதியளிப்பதற்கு அவ்வுறுப்பினர் ஆட்சேபனை தெரிவித்தால், அத்தகைய நிதியளித்தலைச் செய்தலாகாது.

4. சூழல்சார் மற்றும் சமூகத் தாக்கங்களை எதிர்நோக்குகின்ற கொள்கைகளை வரையறையின்றி உட்படுத்தி, வங்கியின் தொழிற்பாடுகளுள் ஒவ்வொன்றும் அதன் தொழிற்பாடுசார் மற்றும் நிதிசார் கொள்கைகளுக்கு இணங்கியொழுகுவதனை வங்கி உறுதிப்படுத்துதல் வேண்டும்.

5. வங்கியானது, நிதியளிப்புக்கான விண்ணப்பமொன்றைக் கவனத்துட்கொள்வதில், இயைபான எல்லாக் காரணிகளையும் கணக்குக் கெடுத்து, பெறுநருக்கு நியாயமானதென வங்கியானது கருதுகின்ற நியதி நிபந்தனைகளின் கீழ் வேறெங்கேனும் நிதியளிப்பை அல்லது வசதிகளைப் பெறுவதற்குப் பெறுநருக்குள்ள ஆற்றலுக்கு உரிய கவனஞ் செலுத்துதல் வேண்டும்.

6. நிதியளிப்பை வழங்குவதில் அல்லது அதற்கு உத்தரவாதமளிப்பதில், வங்கியானது, நிதியளிப்பு ஒப்பந்தத்தின் கீழ் பெறுநரும் உத்தரவாதமளிப்பவரும் (எவரேனுமிருப்பின்) தமது கடப்பாடுகளைத் தீர்த்து வைப்பதற்கான நிலைமையில் இருப்பார்களென்ற எதிர்கால வாய்ப்புகளுக்கு உரிய கவனஞ்செலுத்துதல் வேண்டும்.

7. நிதியளிப்பை வழங்குவதில் அல்லது அதற்கு உத்தரவாதமளிப்பதில், வட்டிவீதம் மற்றும் வேறு விதிப்பனவுகள் அத்துடன் முதலை மீள்கொடுப்பனவு செய்வதற்கான அட்டவணை போன்ற நிதிசார் நியதிகள், வங்கியின் அபிப்பிராயத்தில் சம்பந்தப்பட்ட நிதியளிப்புக்கும் வங்கிக்கான இடருக்கும் தோதானவாறாகவுள்ள அத்தகையனவாக விருத்தல் வேண்டும்.

8. வங்கியின் சாதாரண அல்லது விசேட தொழிற்பாடுகளில் பொறுப்பேற்கப்பட்ட ஏதேனும் நிதியளிப்பின் வரும்படிகளிலிருந்து ஏதேனும் நாட்டிலிருந்து பண்டங்களும் சேவைகளும் பெறுகைசெய்யப்படுவதன் மீது வங்கி மட்டுப்பாடெதனையும் இடுதலாகாது.

9. வங்கியினால் வழங்கப்பட்ட, உத்தரவாதமளிக்கப்பட்ட அல்லது பங்குபற்றப்பட்ட ஏதேனும் நிதியளிப்பின் வரும்படிகள், நிதியளிப்பு எந்நோக்கங்களுக்காக வழங்கப்பட்டதோ அந்நோக்கங்களுக்காக மட்டுமே மற்றும் சிக்கனம், வினைத்திறன் என்ற கரிசனைகளுக்கு உரிய கவனஞ்செலுத்திப் பயன்படுத்தப்படுகின்றன என்பதனை உறுதிப்படுத்துவதற்கு வங்கியானது அவசியமான வழிமுறைகளை எடுத்தல் வேண்டும்.

10. வங்கியானது, அதன் வளங்களுள் அளவு ஒவ்வாத தொகையொன்று ஏதேனும் உறுப்பினரின் நன்மைக்காகப் பயன்படுத்தப்படுவதனைத் தவிர்ப்பதற்கான விருப்பாற்றலுக்கு உரியகவனஞ் செலுத்துதல் வேண்டும்.

11. வங்கியானது, அதன் ஒப்புரவு மூலதனத்திலான முதலீட்டில் நியாயமான பன்முகப்படுத்தலைப் பேணுவதற்கு நாடுதல் வேண்டும். வங்கியானது அதன் ஒப்புரவு முதலீடுகளில், வங்கியின் முதலீட்டைப் பாதுகாப்பதற்கு அவசியமானவிடத்துத்தவிர, எந்த உருவகத்தில் அல்லது தொழில் முயற்சியில் அது முதலீடொன்றை வைத்திருக்கின்றதோ அந்த ஏதேனும் உருவகத்தை அல்லது தொழில்முயற்சியை முகாமை செய்வதற்கான பொறுப்பை வங்கி ஏற்றலாகாதென்பதுடன், சம்பந்தப்பட்ட உருவகத்தில் அல்லது தொழில்முயற்சியில் கட்டுப்படுத்துகின்ற அக்கறையை நாடுதலுமாகாது.

**உறுப்புரை 14 — நிதியளிப்புக்கான நியதிகளும் நிபந்தனைகளும்**

*1.* வங்கியினால் அளிக்கப்பட்ட அல்லது பங்குபற்றப்பட்ட கடன்களின் அல்லது உத்தரவாதமளிக்கப்பட்ட கடன்களின் விடயத்தில், ஒப்பந்தமானது, *13* ஆம் உறுப்புரையில் எடுத்துக்கூறப்பட்ட தொழிற்பாட்டு நெறிகளுக்கு இசைந்தொழுகவும் இவ்வுடன்படிக்கையின் ஏனைய ஏற்பாடுகளுக்கமையவும், சம்பந்தப்பட்ட கடனுக்கான அல்லது உத்தரவாதத்துக்கான நியதி நிபந்தனைகளை நிலைநாட்டுதல் வேண்டும். அத்தகைய நியதி நிபந்தனைகளை நிர்ணயிப்பதில், வங்கியானது, அதன் வருமானத்தையும் நிதிநிலைமைகளையும் பாதுகாப்பதற்கான தேவையை முழுமையாகக் கணக்குக்கெடுத்தல் வேண்டும்.

*2.* கடன்களை அல்லது கடன்களின் உத்தரவாதங்களைப் பெறுபவர் தாமே உறுப்பினரொன்றாகவிராதவிடத்து, வங்கியானது, சாதுரியமானதென அது கருதும்போது, எந்த உறுப்பினரின் ஆள்புலத்தில் சம்பந்தப்பட்ட கருத்திட்டம் நிறைவேற்றப்படவுள்ளதோ அந்த உறுப்பினர், அல்லது வங்கி ஏற்கத்தக்கதான அவ்வுறுப்பினரின் பகிரங்க முகவர் நிலையம் அல்லது ஏதேனும் நிமித்தநிறுவகம், கடன் நியதிகளுக்கிணங்க அதன் முதலின் மீள்கொடுப்பனவுக்கும் அதன் மீதான வட்டியினதும் வேறு விதிப்பனவுகளினதும் கொடுப்பனவுக்கும் உத்தரவாதமளிப்பதனைத் தேவைப்படுத்தலாம்.

*3.* ஏதேனும் ஒப்புரவு முதலீட்டுத்தொகை, பணிப்பாளர் சபையினால் அங்கீகரிக்கப்பட்ட கொள்கைகளின் கீழ் அனுமதிக்கப்பட்டவாறு சம்பந்தப்பட்ட உருவகத்தின் அல்லது தொழில்முயற்சின் ஒப்புரவு மூலதனத்தின் அத்தகைய நூற்றுவீதத்தை விஞ்சுதலாகாது.

*4.* நாணய இடரை மிகக்குறைவாக்குகின்ற கொள்கைகளுக்கிணங்க, சம்பந்தப்பட்ட நாட்டின் நாணயத்தில் வங்கியானது நிதியளிப்பை வழங்கலாம்.

**உறுப்புரை 15 — தொழினுட்ப உதவி**

*1.* வங்கியானது, அதன் நோக்கத்தை நிறைவேற்றுகின்றதும் அதன் பணிகளினுள் வருகின்றதுமான தொழினுட்ப மதியுரையையும் உதவியையும் வேறு ஒத்த வகையினவான உதவிகளையும் வழங்கலாம்.

2. வங்கியானது, அத்தகைய சேவைகளைக் கொடுத்துதவுவதில் உறப்பட்ட செலவினங்கள் மீளளிக்கப்படத்தக்கனவல்லதாக இருக்குமிடத்து, அத்தகைய செலவினங்களை வங்கியின் வருமானத்துக்குப் பொறுப்பித்தல் வேண்டும்.

## அத்தியாயம் IV

### வங்கியின் நிதிகள்

**உறுப்புரை 16 — பொதுத் தத்துவங்கள்**

இவ்வுடன்படிக்கையில் வேறெங்கேனும் குறித்துரைக்கப்பட்ட தத்துவங்களுடன் சேர்த்து மேலதிகமாக, வங்கியானது கீழே தரப்பட்டுள்ள தத்துவங்களைக் கொண்டிருத்தல் வேண்டும் :-

1. வங்கியானது, இயைபான சட்ட ஏற்பாடுகளுக்கிணங்க, உறுப்பு நாடுகளில் அல்லது வேறெங்கேனும் கடன்பெறுதல் மூலம் அல்லது வேறு வழிவகைகள் மூலம் நிதிகளைத் திரட்டலாம்.

2. வங்கியானது, வங்கி வழங்கியுள்ள அல்லது உத்தரவாதமளித்துள்ள அல்லது அவற்றில் முதலீடு செய்துள்ள பிணையங்களை வாங்கலாம் மற்றும் விற்பனைசெய்யலாம்.

3. வங்கியானது, அது எந்தப் பிணையங்களில் முதலீடு செய்துள்ளதோ அந்தப் பிணையங்களை விற்பனைசெய்வதனை வசதிப்படுத்துவதற்கென அவற்றுக்கு உத்தரவாதமளிக்கலாம்.

4. வங்கியின் நோக்கத்துக்கு ஒத்ததாகவுள்ள நோக்கங்களுக்காக ஏதேனும் உருவகத்தினால் அல்லது தொழில்முயற்சியினால் வழங்கப்பட்ட பிணையங்களை வங்கி ஒப்புறுதியீடு செய்யலாம் அல்லது அவற்றின் ஒப்புறுதியீட்டில் பங்குபற்றலாம்.

5. வங்கியானது அதன் தொழிற்பாடுகளில் தேவையாகவிராத நிதிகளை முதலீடு செய்யலாம் அல்லது வைப்பிடலாம்.

6. வங்கியினால் வழங்கப்பட்ட அல்லது உத்தரவாதமளிக்கப்பட்ட ஒவ்வொரு பிணையமும் ஏதேனும் அரசாங்கத்தின் கடப்பாடல்லதென்ற பொருள்பட்ட துலாம்பரமான கூற்றொன்றை, அது உண்மையில் குறிப்பிட்டவோர் அரசாங்கத்தின் கடப்பாடாகவிருந்தாலொழிய, அதன்

*முகப்பில் கொண்டிருத்தல் வேண்டுமென்பதை வங்கியானது உறுதிப் படுத்துதல் வேண்டும்; அவ்விடயத்தில் அது அவ்வாறு குறிப்பிடுதல் வேண்டும்.*

*7. வங்கியானது வேறு திறத்தவர்களுக்காக நம்பிக்கைப்பொறுப்பில் வைத்திருக்கப்பட்ட நிதியங்களைத் தாபித்து நிருவகிக்கலாம். ஆயின், ஆளுநர் சபையினால் அங்கீகரிக்கப்பட்டிருக்கவேண்டிய நம்பிக்கைப் பொறுப்பு நிதியக் கட்டுக்கோப்பின் கீழ், அத்தகைய நம்பிக்கைப்பொறுப்பு நிதியங்கள், வங்கியின் நோக்கத்தை நிறைவேற்றுவதற்குத் திட்டமிடப் பட்டவையாகவும் வங்கியின் பணிகளினுள் வருகின்றவையாகவும் இருத் தல் வேண்டும்.*

*8. வங்கியானது உறுப்புரை 28 இல் ஏற்பாடுசெய்யப்பட்டவாறான விசேட பெரும்பான்மை வாக்கின்மூலம் ஆளுநர் சபையின் அங்கீகாரத் துடன் மட்டுமே, வங்கியின் நோக்கத்தை நிறைவேற்றுவதற்குத் திட்ட மிடப்பட்டவையும் அதன் பணிகளினுள் வருகின்றவையுமான துணை நிலை உருவகங்களைத் தாபிக்கலாம்.*

*9. வங்கியானது, இவ்வுடன்படிக்கையின் ஏற்பாடுகளுக்கு ஒத்ததாக விருக்கின்றவையும் அதன் நோக்கத்தையும் பணிகளையும் முன்னெடுத் துச் செல்வதில் அவசியமாகவிருக்கக்கூடியவாறானவையும் அல்லது தோதாகவிருக்கக்கூடியவாறானவையுமான அத்தகைய வேறு தத்து வங்களைப் பிரயோகிக்கலாம் மற்றும் அத்தகைய விதிகளையும் ஒழுங்கு விதிகளையும் ஆக்கலாம்.*

***உறுப்புரை 17 — விசேட நிதியங்கள்***

*1. வங்கியின் நோக்கத்தை நிறைவேற்றுவதற்குத் திட்டமிடப்பட்ட வையும் அதன் பணிகளினுள் வருகின்றவையுமான விசேட நிதியங்களை வங்கி ஏற்றுக்கொள்ளலாம்; அத்தகைய விசேட நிதியங்கள் வங்கியின் வளங்களாகவிருத்தல் வேண்டும். ஏதேனும் விசேட நிதியத்தை நிருவ கிப்பதற்கான முழுச்செலவும் அவ்விசேட நிதியத்துக்குப் பொறுப்பிக்கப் படுதல் வேண்டும்.*

*2. வங்கியினால் ஏற்றுக்கொள்ளப்பட்ட விசேட நிதியங்கள், வங்கியின் நோக்கத்துடனும் பணிகளுடனும், அத்தகைய நிதியங்கள் தொடர்பான உடன்படிக்கையுடனும் ஒத்தனவாகவிருக்கும் நியதிநிபந்தனைகளின்மீது பயன்படுத்தப்படலாம்.*

3. வங்கியானது அத்தகைய விசேட நிதியத்தைத் தாபிப்பதற்கும், நிருவகிப்பதற்கும், பயன்படுத்துவதற்கும் தேவைப்படக்கூடியவாறான அத்தகைய விசேட விதிகளையும் ஒழுங்குவிதிகளையும் நிறைவேற்றுதல் வேண்டும். அத்தகைய விதிகளும் ஒழுங்குவிதிகளும், வங்கியின் சாதாரணத் தொழிற்பாடுகளுக்கு மட்டுமே வெளிப்படையாக ஏற்புடையற்பாலவாறான அவ்வேற்பாடுகளுக்காகத்தவிர, இவ்வுடன்படிக்கையின் ஏற்பாடுகளுக்கு ஒத்தனவாகவிருத்தல் வேண்டும்.

4. "விசேட நிதிய வளங்கள்" என்ற பதம் ஏதேனும் விசேட நிதியத்தின் வளங்களைக் குறிப்பீடுசெய்தல் வேண்டுமென்பதுடன், பின்வருவன வற்றை உள்ளடக்குதலும் வேண்டும்:-

(i) ஏதேனும் விசேட நிதியத்தில் சேர்க்கப்படுவதற்காக வங்கியினால் ஏற்றுக்கொள்ளப்பட்ட நிதிகள்;

(ii) ஏதேனும் விசேட நிதியத்தை ஆளுகின்ற வங்கியின் விதிகள் மற்றும் ஒழுங்குவிதிகளின் கீழ் அத்தகைய விசேட நிதியத்தினாற் பெறப்படுகின்றவையும், அத்தகைய விசேட நிதியத்தின் வளங்களிலிருந்து நிதியளிக்கப்பட்டவையுமான கடன்கள் அல்லது உத்தரவாதங்கள் தொடர்பில் பெறப்பட்ட நிதிகளும் எவையேனும் ஒப்புரவு முதலீடுகளின் வரும்படிகளும்;

(iii) விசேட நிதிய வளங்களை முதலீடு செய்வதிலிருந்து வந்து உறப்பெற்ற வருமானம்; அத்துடன்

(iv) ஏதேனும் விசேட நிதியத்தின் கையாளுகையில் இடப்பட்ட வேறெவையேனும் வளங்கள்.

## உறுப்புரை 18 — தேறிய வருமானத்தைக் குறித்தொதுக்குதலும் பகிர்ந்தளித்தலும்

1. வங்கியின் தேறிய வருமானத்தின் எப்பகுதி, ஒதுக்குகளுக்கான ஏற்பாட்டைச் செய்தபின்னர், வைத்திருக்கப்பட்ட ஈட்டுகைகளுக்கு அல்லது வேறு நோக்கங்களுக்குக் குறித்தொதுக்கப்படுதல் வேண்டுமென்றும், எப்பகுதி (ஏதேனுமிருப்பின்) உறுப்பினர்களுக்குப் பகிர்ந்தளிக்கப்படுதல் வேண்டுமென்றும் ஆளுநர் சபை, ஆகக்குறைந்தது வருடாந்தமேனும் தீர்மானித்தல் வேண்டும். ஏனைய நோக்கங்களுக்கு வங்கியின் தேறிய வருமானத்தைக் குறித்தொதுக்குதல் பற்றிய அத்தகைய ஏதேனும் முடிபு 28 ஆம் உறுப்புரையில் ஏற்பாடு செய்யப்பட்டவாறாக மீயுயர் பெரும்பான்மை வாக்கின்மூலம் எடுக்கப்படுதல் வேண்டும்.

2. முற்போந்த பந்தியிற் குறிப்பீடு செய்யப்பட்ட பகிர்ந்தளிப்பு, ஒவ்வோர் உறுப்பினரினாலும் வைத்திருக்கப்பட்ட பங்குகளின் எண்ணிக்கைக்கு விகிதாசாரமாகச் செய்யப்படுதல் வேண்டுமென்பதுடன், கொடுப்பனவுகள், ஆளுநர் சபை தீர்மானிக்கவேண்டியவாறான அத்தகைய முறையிலும் அத்தகைய நாணயத்திலும் செய்யப்படுதலும் வேண்டும்.

**உறுப்புரை 19 — நாணயங்கள்**

1. உறுப்பினர்கள், ஏதேனும் நாட்டிலான கொடுப்பனவுகளுக்காக, வங்கியினாலான அல்லது வங்கியிடமிருந்து எவரேனும் பெறுநரினாலான பெறுகை, வைத்திருக்கை, பயன்பாடு அல்லது கைமாற்றுகை என்பனவுட்பட, நாணயங்களின்மீதான எவையேனும் மட்டுப்பாடுகளை விதித்தலாகாது.

2. ஏதேனும் நாணயத்தை இன்னொன்றைத் தொடர்புறுத்தி பெறுமதிமதிப்பிடுவது அல்லது ஏதேனும் நாணயம் மாற்றத்தக்கதாவென்பதைத் தீர்மானிப்பது இவ்வுடன்படிக்கையின்கீழ் அவசியமாக வரும்போதெல்லாம், அத்தகைய பெறுமதிமதிப்பீடு அல்லது தீர்மானம் வங்கியினால் செய்யப்படுதல் வேண்டும்.

**உறுப்புரை 20 — வங்கியின் பொறுப்புக்களைத் தீர்த்துவைப்பதற்கான முறைகள்**

1. வங்கியின் சாதாரணத் தொழிற்பாடுகளில், வங்கியினால் அளிக்கப்பட்ட, பங்குபற்றப்பட்ட அல்லது உத்தரவாதமளிக்கப்பட்ட நிலுவைகள் அல்லது தவணைதவறுகையின் விடயங்களிலும், 11ஆம் உறுப்புரையின் உட்பந்தி 2 (vi) இன்கீழ் ஒப்புரவு முதலீட்டின்மீதான அல்லது வேறு வகையினவான நிதியளிப்பின்மீதான நட்டங்களின் விடயங்களிலும் வங்கி அது தோதானதெனக் கருதுகின்றவாறான அத்தகைய நடவடிக்கையை எடுத்தல் வேண்டும். வங்கியானது நிகழக்கூடிய நட்டங்களுக்கெதிராகத் தோதான ஏற்பாடுகளைப் பேணுதல் வேண்டும்.

2. வங்கியின் சாதாரணத் தொழிற்பாடுகளில் எழுகின்ற நட்டங்கள் பின்வருமாறு பொறுப்பிக்கப்படுதல் வேண்டும்:-

(i) முதலாவதாக, மேலே 1 ஆம் பந்தியிற் குறிப்பீடு செய்யப்பட்ட ஏற்பாடுகளுக்கு;

(ii) இரண்டாவதாக, தேறிய வருமானத்துக்கு;

(iii) மூன்றாவதாக, ஒதுக்குகளுக்கும் வைத்திருக்கப்பட்ட ஈட்டுகைகளுக்குமெதிராக;

(iv) நான்காவதாக, பாதிக்கப்படாத செலுத்தப்பட்ட மூலதனத்துக்கெதிராக; அத்துடன்

(v) கடைசியாக, 6 ஆம் உறுப்புரையின் 3 ஆம் பந்தியின் ஏற்பாடுகளுக்கிணங்க அழைக்கப்படவேண்டிய அழைக்கப்பட்டிராத ஒப்பப்பணம் செலுத்தப்பட்ட அழைக்கப்படற்பாலதான மூலதனத்தின் தோதான தொகைக்கெதிராக.

## அத்தியாயம் V

### ஆளுகை

**உறுப்புரை 21 — கட்டமைப்பு**

வங்கியானது ஆளுநர் சபையையும், பணிப்பாளர் சபையையும், ஒரு தலைவரையும், ஒன்று அல்லது அதற்கு மேற்பட்ட துணைத்தலைவர்களையும், அவசியமெனக் கருதப்படக்கூடியவாறான அத்தகைய வேறு அலுவலர்களையும் பணியாட்டொகுதியினரையும் கொண்டிருத்தல் வேண்டும்.

**உறுப்புரை 22 — ஆளுநர் சபை: அமைப்பு**

1. ஒவ்வோர் உறுப்பினரும் ஆளுநர் சபையில் பிரதிநிதித்துவப் படுத்தப்படுதல் வேண்டுமென்பதுடன், ஓர் ஆளுநரையும் ஒரு மாற்று ஆளுநரையும் நியமித்தலும் வேண்டும். ஒவ்வோர் ஆளுநரும் மாற்று ஆளுநரும், நியமிக்கின்ற உறுப்பினரின் விருப்பத்தின்பேரில் சேவையாற்றுதல் வேண்டும். மாற்று ஆளுநரெவரும், அவரது முதல்வர் வருகை தராதபோது தவிர, வாக்களித்தலாகாது.

2. சபையானது, அதன் வருடாந்தக் கூட்டங்களுள் ஒவ்வொன்றிலும், தவிசாளராக ஆளுநர்களுள் ஒருவரைத் தேர்ந்தெடுத்தல் வேண்டும்; அடுத்த தவிசாளர் தேர்ந்தெடுக்கப்படும்வரை அவர் பதவி வகித்தல் வேண்டும்.

3. ஆளுநர்களும் மாற்று ஆளுநர்களும் வங்கியிடமிருந்து ஊதியமின்றி அத்தகையோராகச் சேவையாற்றுதல் வேண்டும், ஆனால் வங்கியானது, கூட்டங்களுக்கு வருகை தருவதில் உறப்பட்ட நியாயமான செலவுகளை அவர்களுக்குச் செலுத்தலாம்.

**உறுப்புரை 23 — ஆளுநர் சபை : தத்துவங்கள்**

1. வங்கிக்குள்ள எல்லாத் தத்துவங்களும் ஆளுநர் சபைக்குரித்தாக்கப்படுதல் வேண்டும்.

2. ஆளுநர் சபையானது பணிப்பாளர் சபைக்கு, பின்வரும் தத்துவங்கள் தவிர, அதன் தத்துவங்களுள் எவற்றையும் அல்லது எல்லாவற்றையும் கையளிக்கலாம்:-

(i) புதிய உறுப்பினர்களைச் சேர்த்தலும் அவர்களின் சேர்க்கை நிபந்தனைகளைத் தீர்மானித்தலும்;

(ii) வங்கியின் அதிகாரமளிக்கப்பட்ட மூலதனப் பங்குத் தொகுதியை அதிகரித்தல் அல்லது குறைத்தல்;

(iii) உறுப்பினரொன்றை இடைநிறுத்துதல்;

(iv) பணிப்பாளர் சபையினால் கொடுக்கப்பட்ட இவ்வுடன்படிக்கையின் பொருள்கோடல்களிலிருந்தான அல்லது பிரயோகங்களிலிருந்தான மேன்முறையீடுகளை முடிபு செய்தல்;

(v) 25 ஆம் உறுப்புரையின் 6 ஆம் பந்தியைப் பின்பற்றி வங்கியின் பணிப்பாளர்களைத் தேர்ந்தெடுத்தலும் பணிப்பாளர்களுக்கும் மாற்றுப் பணிப்பாளர்களுக்கும் செலுத்தப்படவேண்டிய செலவுகளையும், ஊதியமிருப்பின் அதனையும், தீர்மானித்தலும்;

(vi) தலைவரைத் தேர்ந்தெடுத்தலும், அவரைப் பதவியிலிருந்து இடைநிறுத்துதலும் அல்லது அகற்றுதலும், அவரது ஊதியத்தையும் வேறு சேவை நிபந்தனைகளையும் தீர்மானித்தலும்;

(vii) கணக்காய்வாளரின் அறிக்கையைப் பரிசீலனை செய்தபின்னர் வங்கியின் பொதுவான ஐந்தொகையையும் இலாபநட்டக் கூற்றையும் அங்கீகரித்தல்;

(viii) வங்கியின் ஒதுக்குகளையும் தேறிய இலாபங்களின் குறித்தொதுக்குகையையும் பகிர்ந்தளிப்பையும் தீர்மானித்தல்;

(ix) இவ்வுடன்படிக்கையைத் திருத்துதல்;

(x) வங்கியின் தொழிற்பாடுகளை முடிவுறுத்துவதற்கும் அதன் சொத்துக்களைப் பகிர்ந்தளிப்பதற்கும் முடிபு செய்தல்; அத்துடன்

(xi) இவ்வுடன்படிக்கையில் ஆளுநர் சபைக்கு வெளிப்படையாகக் குறித்தளிக்கப்படுகின்றவாறான அத்தகைய வேறு தத்துவங்களைப் பிரயோகித்தல்.

3. ஆளுநர் சபை, இவ்வுறுப்புரையின் 2 ஆம் பந்தியின்கீழ் பணிப்பாளர் சபைக்குக் கையளிக்கப்பட்ட ஏதேனும் கருமத்தின் மீது அதிகாரம் பிரயோகிப்பதற்கான முழுத்தத்துவத்தையும் வைத்திருத்தல் வேண்டும்.

**உறுப்புரை 24 — ஆளுநர் சபை : நடவடிக்கைமுறை**

1. ஆளுநர் சபையானது, ஆளுநர் சபையினால் ஏற்பாடு செய்யப்படக்கூடியவாறான அல்லது பணிப்பாளர் சபையினால் கூட்டப்படக்கூடியவாறான வருடாந்தக் கூட்டமொன்றையும் அத்தகைய வேறு கூட்டங்களையும் நடாத்துதல் வேண்டும். ஆளுநர் சபையின் கூட்டங்கள், வங்கியின் ஐந்து (5) உறுப்பினர்களினால் வேண்டுகோள் விடுக்கப்படும்போதெல்லாம் பணிப்பாளர் சபையினால் கூட்டப்படுதல் வேண்டும்.

2. ஆளுநர்களுள் பெரும்பான்மையோர் ஆளுநர் சபையின் ஏதேனும் கூட்டத்துக்கான கூட்டநடப்பெண்ணாக அமைதல் வேண்டும்; ஆயின், அத்தகைய பெரும்பான்மை, உறுப்பினர்களின் மொத்த வாக்களிக்கும் தத்துவத்தின் மூன்றிலிரெண்டுக்குக் குறையாததைக் குறித்தல் வேண்டும்.

3. ஆளுநர் சபையானது, ஒழுங்குவிதிமூலம், கூட்டமொன்றில்லாமல் குறித்தவொரு கேள்வியின் மீது பணிப்பாளர் சபை ஆளுநர்களின் வாக்கை அதன்மூலம் பெறக்கூடிய நடவடிக்கைமுறைகளை நிலைநாட்டுதல் வேண்டுமென்பதுடன், விசேட சூழ்நிலைகளில் ஆளுநர் சபையின் இலத்திரனியல் ரீதியிலான கூட்டங்களுக்காக ஏற்பாடு செய்தலும் வேண்டும்.

4. ஆளுநர் சபையும் பணிப்பாளர் சபையும், அதிகாரமளிக்கப்பட்ட அளவுக்கு, வங்கியின் தொழிலை நடாத்துவதற்கு அவசியமாகவிருக்கக்கூடியவாறாக அல்லது தோதாகவிருக்கக்கூடியவாறாக, அத்தகைய துணைநிலை உருவகங்களைத் தாபிக்கலாம் மற்றும் அத்தகைய விதிகளையும் ஒழுங்குவிதிகளையும் நிறைவேற்றலாம்.

**உறுப்புரை 25 — பணிப்பாளர் சபை : அமைப்பு**

1. பணிப்பாளர் சபையானது, ஆளுநர் சபையின் உறுப்பினர்களாக விராத பன்னிரெண்டு (12) உறுப்பினர்களைக் கொண்டமைந்ததாக விருத்தல் வேண்டும், அவர்களுள் :-

(i) ஒன்பது (9) பேர் பிராந்திய உறுப்பினர்களைப் பிரதிநிதித்துவப்படுத்துகின்ற ஆளுநர்களினால் தேர்ந்தெடுக்கப்படுதல் வேண்டும்; அத்துடன்

(ii) மூன்று (3) பேர் பிராந்தியச்சார்பற்ற உறுப்பினர்களைப் பிரதிநிதித்துவப்படுத்துகின்ற ஆளுநர்களினால் தேர்ந்தெடுக்கப்படுதல் வேண்டும்.

பணிப்பாளர்கள், பொருளாதார, நிதிசார் கருமங்களில் உயர்திறமை வாய்ந்த ஆட்களாகவிருத்தல் வேண்டுமென்பதுடன், அட்டவணை ஆவுக்கிணங்கத் தேர்ந்தெடுக்கப்படுதலும் வேண்டும். பணிப்பாளர்கள், அவர்களின் ஆளுநர்கள் அவர்களைத் தேர்ந்தெடுத்துள்ள மற்றும் அவர்களின் ஆளுநர்கள் தமது வாக்குகளை அவர்களுக்குக் குறித்தளித்துள்ள உறுப்பினர்களைப் பிரதிநிதித்துவப்படுத்துதல் வேண்டும்.

2. ஆளுநர் சபை, காலத்துக்குக்காலம், பணிப்பாளர் சபையின் அளவையும் அமைப்பையும் பரிசீலனை செய்தல் வேண்டுமென்பதுடன், 28 ஆம் உறுப்புரையில் ஏற்பாடுசெய்யப்பட்டவாறாக மீயுயர் பெரும்பான்மை வாக்கின் மூலம், தோதானவாறாக அளவை அதிகரிக்கலாம் அல்லது குறைக்கலாம் அல்லது அமைப்பை மீளாய்வு செய்யலாம்.

3. பணிப்பாளர் ஒவ்வொருவரும், அவர் சமூகமளிக்காதபோது அவருக்காகச் செயலாற்றுவதற்கான முழுத்தத்துவத்தையும் கொண்ட மாற்றுப் பணிப்பாளரொருவரை நியமித்தல் வேண்டும். ஆளுநர் சபை, உறுப்பினர்களின் குறித்துரைக்கப்பட்டவோர் எண்ணிக்கைக்கு மேற்பட்டோரினால் தேர்ந்தெடுக்கப்பட்ட பணிப்பாளரொருவர் மேலதிக மாற்றுப் பணிப்பாளரை நியமிப்பதனை இயலச் செய்கின்ற விதிகளை நிறைவேற்றலாம்.

4. பணிப்பாளர்களும் மாற்றுப் பணிப்பாளர்களும் உறுப்பு நாடுகளின் நாட்டவர்களாதல் வேண்டும். இரண்டு அல்லது அதற்கு மேற்பட்ட பணிப்பாளர்கள் எவரும் ஒரே நாட்டினத்தைக் கொண்டிருத்தலாகாது அல்லது இரண்டு அல்லது அதற்கு மேற்பட்ட மாற்றுப் பணிப்பாளர்கள்

ஒரே நாட்டினத்தைக் கொண்டிருத்தலாகாது. மாற்றுப் பணிப்பாளர்கள் சபைக் கூட்டங்களில் பங்குபற்றலாம் ஆனால் மாற்றுப் பணிப்பாளர் பணிப்பாளரின் இடத்திற் செயலாற்றுகின்ற போது மட்டுமே வாக்களிக்கலாம்.

5. பணிப்பாளர்கள் இரண்டு (2) ஆண்டுக்காலத்துக்குப் பதவிவகித்தல் வேண்டுமென்பதுடன், மீளத்தேர்ந்தெடுக்கவும்படலாம்.

(அ) பணிப்பாளர்கள், தமது அடுத்துறுநர்கள் தெரிவு செய்யப்பட்டு பதவியேற்கும் வரை பதவியில் தொடர்ந்திருத்தல் வேண்டும்

(ஆ) பணிப்பாளரொருவரின் பதவி அவரது காலம் முடியுமுன்னர் நூற்றியெண்பது (180) நாட்களுக்கு மேற்பட வறிதாக வந்தால், முன்னைய பணிப்பாளரைத் தேர்ந்தெடுத்த ஆளுநர்களினால், எஞ்சிய காலத்துக்காக, அட்டவணை 'ஆ' வுக்கிணங்க அடுத்துறுநரொருவர் தெரிவு செய்யப்படுதல் வேண்டும். அத்தகைய ஆளுநர்களினால் அளிக்கப்பட்ட வாக்குகளின் பெரும்பான்மை அத்தகைய தேர்தலுக்குத் தேவைப்படுதல் வேண்டும். பணிப்பாளரொருவரைத் தேர்ந்தெடுத்த ஆளுநர்கள், பணிப்பாளரொருவரின் பதவி அவரது காலம் முடியுமுன்னர் நூற்றியெண்பது (180) நாட்களுக்கு அல்லது அதற்குக் குறைவாக வறிதாக வந்தால், அடுத்துறுநரொருவரை அதேபோன்று தெரிவுசெய்யலாம்.

(இ) பணிப்பாளர் பதவியொன்று வறிதாகவிருக்கையில், முன்னைய பணிப்பாளரின் மாற்றுப் பணிப்பாளர், மாற்றுப் பணிப்பாளரொருவரை நியமிப்பதற்கான தத்துவம் தவிர, முன்னைய பணிப்பாளரின் தத்துவங்களைப் பிரயோகித்தல் வேண்டும்.

6. பணிப்பாளர்களும் மாற்றுப் பணிப்பாளர்களும், ஆளுநர் சபை வேறுவகையாக முடிபு செய்தாலொழிய, வங்கியிடமிருந்து ஊதியமின்றிச் சேவையாற்றுதல் வேண்டும், ஆனால் வங்கியானது, கூட்டங்களுக்கு வருகை தருவதில் உறப்பட்ட நியாயமான செலவுகளை அவர்களுக்குச் செலுத்தலாம்.

***உறுப்புரை 26 — பணிப்பாளர் சபை : தத்துவங்கள்***

*வங்கியின் பொதுவான தொழிற்பாடுகளின் பணிப்புக்காகப் பணிப்பாளர் சபை பொறுப்புள்ளதாதல் வேண்டுமென்பதுடன், இந்நோக்கத்துக்காக, இவ்வுடன்படிக்கையினால் வெளிப்படையாக அதற்குக் குறித்தளிக்கப் பட்ட தத்துவங்களுடன் சேர்த்து மேலதிகமாக, ஆளுநர் சபையினால் அதற்குக் கையளிக்கப்பட்ட எல்லாத் தத்துவங்களையும் பிரயோகித்தலும் வேண்டும்; அத்துடன் குறிப்பாக:*

(i) *ஆளுநர் சபையின் பணியைத் தயாரித்தல் வேண்டும்;*

(ii) *வங்கியின் கொள்கைகளை நிலைநாட்டுதல் வேண்டுமென்பது டன், உறுப்பினர்களின் மொத்த வாக்களிக்கும் தத்துவத்தைக் கொண்ட நான்கில் மூன்றுக்குக் குறையாததைக் குறிக்கின்ற பெரும்பான்மை மூலம் பாரிய தொழிற்பாடுசார் மற்றும் நிதிசார் கொள்கைகளின் மீதும் வங்கிக் கொள்கைகளின்கீழ் தலைவருக்கு அதிகாரத்தைக் கையளித்தலின் மீதும் முடிபு களை எடுத்தலும் வேண்டும்;*

(iii) *11 ஆம் உறுப்புரையின் 2 ஆம் பந்தியின்கீழ் வங்கியின் தொழிற்பாடுகள் சம்பந்தமாக முடிபுகளை எடுத்தல் வேண்டு மென்பதுடன், உறுப்பினர்களின் மொத்த வாக்களிக்கும் தத்துவத்தைக் கொண்ட நான்கில் மூன்றுக்குக் குறையாததைக் குறிக்கின்ற பெரும்பான்மை மூலம் அத்தகைய அதிகாரத்தைத் தலைவருக்குக் கையளித்தல் பற்றி முடிபு செய்தலும் வேண் டும்;*

(iv) *கிரமமான அடிப்படையில் வங்கியின் முகாமையையும் தொழிற்பாட்டையும் மேற்பார்வை செய்தல் வேண்டுமென்பது டன், வெளிப்படையானதன்மை, திறந்ததன்மை, சுதந்திரம் மற்றும் வகைசொல்லவேண்டியமை என்பன பற்றிய நெறிகளுக்கிணங்க, அந்நோக்கத்துக்காக மேற்பார்வை அமைப்பு முறையொன்றைத் தாபித்தலும் வேண்டும்;*

(v) *வங்கியின் செயல்நுணுக்கம், வருடாந்தத் திட்டம் மற்றும் வரவு செலவுத்திட்டத்தை அங்கீகரித்தல் வேண்டும்;*

(vi) *சாதுரியமானவையெனக் கருதப்படக்கூடியவாறான அத்த கைய குழுக்களை நியமித்தல் வேண்டும்; அத்துடன்*

(vii) ஆளுநர் சபையின் அங்கீகாரத்துக்காக ஒவ்வொரு நிதியாண்டுக்குமான கணக்காய்வு செய்யப்பட்ட கணக்குகளைச் சமர்ப்பித்தல் வேண்டும்.

**உறுப்புரை 27 — பணிப்பாளர் சபை : நடவடிக்கைமுறை**

*1.* பணிப்பாளர் சபை, ஆண்டுபூராகவும் காலத்துக்குக்காலம், வங்கியின் தொழில் தேவைப்படுத்தக்கூடியவாறு அடிக்கடியாகக் கூடுதல் வேண்டும். பணிப்பாளர் சபை, 28 ஆம் உறுப்புரையில் ஏற்பாடு செய்யப்பட்டவாறாக மீயுயர் பெரும்பான்மை வாக்கின்மூலம் ஆளுநர் சபையினால் வேறுவகையாக முடிபுசெய்யப்பட்டவாறுதவிர, வதிவற்ற அடிப்படையில் பணியாற்றுதல் வேண்டும். கூட்டங்கள் தவிசாளரினால் அல்லது மூன்று (3) பணிப்பாளர்களினால் வேண்டுகோள் விடுக்கப்படும் போதெல்லாம் கூட்டப்படலாம்.

*2.* பணிப்பாளர்களுள் பெரும்பான்மையோர், பணிப்பாளர் சபையின் ஏதேனும் கூட்டத்துக்கான கூட்டநடப்பெண்ணாகவமைதல் வேண்டும்; ஆயின், அத்தகைய பெரும்பான்மை, உறுப்பினர்களின் மொத்த வாக்களிக்கும் தத்துவத்தைக்கொண்ட மூன்றிலிரெண்டுக்குக் குறையாததைக் குறித்தல் வேண்டும்.

*3.* ஆளுநர் சபை, எந்த ஒழுங்குவிதிகளின்கீழ் அதன் நாட்டினத்தைச் சேர்ந்த பணிப்பாளரெவரும் இராதிருப்பின் உறுப்பினரொன்று அவ்வுறுப்பினருடன் குறிப்பாகச் சம்பந்தப்பட்ட கருமமொன்று கவனத்துட்கொள்ளப்படும் போது வாக்களிப்பதற்கான உரிமையின்றிப் பணிப்பாளர் சபையின் ஏதேனும் கூட்டத்துக்கு வருகை தருவதற்குப் பிரதிநிதியொருவரை அனுப்பலாமோ அந்த ஒழுங்குவிதிகளை நிறைவேற்றலாம்.

*4.* பணிப்பாளர் சபை, அதன்மூலம் சபையானது இலத்திரனியல் ரீதியிலான கூட்டத்தை நடாத்தமுடியுமான அல்லது கூட்டமொன்றை நடாத்தாமல் ஒரு கருமத்தின்மீது வாக்களிக்கமுடியுமான நடவடிக்கை முறைகளை நிலைநாட்டுதல் வேண்டும்.

**உறுப்புரை 28 — வாக்களித்தல்**

*1.* ஒவ்வோர் உறுப்பினரினதும் மொத்த வாக்களிக்கும் தத்துவம், அதன் அடிப்படை வாக்குகள், பங்கு வாக்குகள் மற்றும் தாபக உறுப்பினரின் விடயத்தில் அதன் தாபக உறுப்பினர் வாக்குகள் என்பவற்றின் மொத்தத்தொகையைக் கொண்டிருத்தல் வேண்டும்.

(i) ஒவ்வோர் உறுப்பினரினதும் அடிப்படை வாக்குகள், எல்லா உறுப்பினர்களினதும் அடிப்படை வாக்குகள், பங்கு வாக்குகள் மற்றும் தாபக உறுப்பினர் வாக்குகள் என்பவற்றின் கூட்டுமொத்தத் தொகையின் பன்னிரெண்டு (12) சதவீதத்தை எல்லா உறுப்பினர்களிடையேயும் சமமாகப் பகிர்ந்தளிப்பதிலிருந்து விளைகின்ற வாக்குகளின் எண்ணிக்கையாதல் வேண்டும்.

(ii) ஒவ்வோர் உறுப்பினரினதும் பங்கு வாக்குகளின் எண்ணிக்கை, அவ்வுறுப்பினரினால் வைத்திருக்கப்பட்ட வங்கியின் மூலதனப் பங்குத்தொகுதியின் பங்குகளின் எண்ணிக்கைக்குச் சமமாகவிருத்தல் வேண்டும்.

(iii) ஒவ்வொரு தாபக உறுப்பினருக்கும் அறுநூறு (600) தாபக உறுப்பினர் வாக்குகள் குறித்தொதுக்கப்படுதல் வேண்டும்.

உறுப்பினரொன்று 6 ஆம் உறுப்புரையின்கீழ் பங்குவகையாகச் செலுத்தப்பட்ட பங்குகள் தொடர்பான அதன் கடப்பாடுகள் தொடர்பில் வருமதியாகவுள்ள தொகையின் ஏதேனும் பாகத்தைச் செலுத்துவதற்குத் தவறும் பட்சத்தில், அவ்வுறுப்பினரினால் பிரயோகிக்கப்படவேண்டிய பங்கு வாக்குகளின் எண்ணிக்கை, அத்தகைய தவறுதல் தொடர்ந்திருக்கும் வரை, வருமதியாகவுள்ளதும் செலுத்தப்படாததுமான தொகை அவ்வுறுப்பினரினால் ஒப்பப்பணமாகச் செலுத்தப்பட்ட பங்குவகையாகச் செலுத்தப்பட்ட பங்குகளின் மொத்தச் சமப்பெறுமதியை எந்த நூற்றுவீதத்தினால் குறிக்கின்றதோ அந்த நூற்றுவீதத்தினால் விகிதாசாரப்படி குறைக்கப்படுதல் வேண்டும்.

2. ஆளுநர் சபையில் வாக்களிக்கையில், ஒவ்வோர் ஆளுநரும், அவர் எந்த உறுப்பினரைப் பிரதிநிதித்துவப்படுத்துகின்றாரோ அந்த உறுப்பினரின் வாக்குகளை அளிப்பதற்கு உரித்துடையவராதல் வேண்டும்.

(i) இவ்வுடன்படிக்கையில் வேறுவகையில் வெளிப்படையாக ஏற்பாடுசெய்யப்பட்டவாறுதவிர, ஆளுநர் சபையின் முன்னரான எல்லாக் கருமங்களும், அளிக்கப்பட்ட வாக்குகளின் பெரும்பான்மைமூலம் முடிபுசெய்யப்படுதல் வேண்டும்.

(ii) ஆளுநர் சபையின் மீயுயர் பெரும்பான்மை வாக்கு, உறுப்பினர்களின் மொத்த வாக்களிக்கும் தத்துவத்தின் நான்கில் மூன்றுக்குக் குறையாததைப் பிரதிநிதித்துவப்படுத்துகின்ற

ஆளுநர்களின் மொத்த எண்ணிக்கையின் மூன்றிலிரண்டு பங்கினரின் சார்நிலை வாக்கைத் தேவைப்படுத்துதல் வேண்டும்.

(iii) ஆளுநர் சபையின் விசேட பெரும்பான்மை வாக்கு, உறுப்பினர்களின் மொத்த வாக்களிக்கும் தத்துவத்தின் பெரும்பான்மைக்குக் குறையாததைப் பிரதிநிதித்துவப்படுத்துகின்ற ஆளுநர்களின் மொத்த எண்ணிக்கையின் சார்நிலை வாக்கைத் தேவைப்படுத்துதல் வேண்டும்.

*3.* பணிப்பாளர் சபையில் வாக்களிக்கையில், ஒவ்வொரு பணிப்பாளரும், அவரைத் தேர்ந்தெடுத்த ஆளுநர்கள் எந்த எண்ணிக்கையினவான வாக்குகளுக்கு உரித்துடையோராகவுள்ளனரோ அந்த எண்ணிக்கையினவான வாக்குகளை அளிப்பதற்கும் மற்றும் அட்டவணை ஆ வைப் பின்பற்றி அவருக்குத் தமது வாக்குகளைக் குறித்தளித்துள்ள எவரேனும் ஆளுநர்கள் உரித்துடையோராகவுள்ள அந்த எண்ணிக்கையினவான வாக்குகளை அளிப்பதற்கும் உரித்துடையவராதல் வேண்டும்.

(i) ஓர் உறுப்பினருக்கு மேற்பட்டவற்றின் வாக்குகளை அளிப்பதற்கு உரித்துடைய பணிப்பாளர் அவ்வுறுப்பினர்களுக்காகத் தனிவேறாக வாக்குகளை அளிக்கலாம்.

(ii) இவ்வுடன்படிக்கையில் வெளிப்படையாக வேறுவகையில் ஏற்பாடுசெய்யப்பட்டவாறுதவிர, பணிப்பாளர் சபைக்கு முன்னரான எல்லாக் கருமங்களும் அளிக்கப்பட்ட வாக்குகளின் பெரும்பான்மைமூலம் முடிபுசெய்யப்படுதல் வேண்டும்.

**உறுப்புரை 29 — தலைவர்**

*1.* ஆளுநர் சபை, திறந்த, வெளிப்படையான மற்றும் திறமை அடிப்படையிலான செய்முறையினூடாக 28ஆம் உறுப்புரையில் ஏற்பாடு செய்யப்பட்டவாறாக மீயுயர் பெரும்பான்மை வாக்கின்மூலம் வங்கியின் தலைவரொருவரைத் தேர்ந்தெடுத்தல் வேண்டும். அவர் பிராந்திய உறுப்புநாட்டின் நாட்டவராகவிருத்தல் வேண்டும். தலைவர், பதவி வகிக்கையில், ஓர் ஆளுநராக அல்லது பணிப்பாளராக அல்லது இவர்களுள் ஒருவருக்கான மாற்றாளாகவிருத்தலாகாது.

*2.* தலைவரின் பதவிக்காலம் ஐந்து (5) ஆண்டுகளாதல் வேண்டும். அவர் ஒருதடவை மீளத்தேர்ந்தெடுக்கப்படலாம். தலைவர், 28 ஆம் உறுப்புரையில் ஏற்பாடு செய்யப்பட்டவாறாக மீயுயர் பெரும்பான்மை வாக்கின்மூலம் ஆளுநர்சபை அவ்வாறு முடிபு செய்யும்போது இடை நிறுத்தப்படலாம் அல்லது பதவியிலிருந்து அகற்றப்படலாம்.

(அ) தலைவரின் பதவி, எக்காரணத்துக்காகவேனும் அவரது பதவிக்காலத்தின்போது வறிதாக வந்தால், ஆளுநர் சபை தற்காலிகக் காலப்பகுதிக்காகப் பதிற்கடமையாற்றும் தலைவரை நியமித்தல் வேண்டும் அல்லது இவ்வுறுப்புரையின் 1 ஆம் பந்திக்கிணங்கப் புதிய தலைவரைத் தேர்ந்தெடுத்தல் வேண்டும்.

*3.* தலைவர், பணிப்பாளர் சபையின் தவிசாளராகவிருத்தல் வேண்டும் ஆனால், சமப்பிரிவின் விடயத்தில் முடிபுசெய்கின்ற வாக்கைத்தவிர, வாக்கெதனையும் உடையவராதலாகாது. அவர் ஆளுநர்சபைக் கூட்டங்களில் பங்குபற்றலாம் ஆனால் வாக்களித்தலாகாது.

*4.* தலைவர், வங்கியின் சட்டப் பிரதிநிதியாகவிருத்தல் வேண்டும். அவர் வங்கியின் பணியாட்டொகுதி அதிகாரியாகவிருத்தல் வேண்டுமென்பதுடன், பணிப்பாளர் சபையின் பணிப்பின்கீழ் வங்கியின் நடப்புத் தொழிலை நடாத்துதலும் வேண்டும்.

**உறுப்புரை 30 — வங்கியின் அலுவலர்களும் பணியாட்டொகுதியினரும்**

*1.* திறந்த, வெளிப்படையான மற்றும் திறமை அடிப்படையிலான செய்முறையின் அடிப்படையில், தலைவரின் விதப்புரையின்மீது ஒன்று அல்லது அதற்குமேற்பட்ட துணைத்தலைவர்கள் பணிப்பாளர் சபையினால் நியமிக்கப்படுதல் வேண்டும். துணைத்தலைவர், பணிப்பாளர் சபையினால் தீர்மானிக்கப்படக்கூடியவாறு, அத்தகைய காலப்பகுதிக்குப் பதவிவகித்தலும், அத்தகைய அதிகாரத்தைப் பிரயோகித்தலும் வங்கியை நிருவகிப்பதில் அத்தகைய பணிகளைப் புரிதலும் வேண்டும். தலைவர் வருகைதராதிருக்கையில் அல்லது இயலாமைக்குட்பட்டிருக்கையில், துணைத்தலைவரொருவர் தலைவரின் அதிகாரத்தைப் பிரயோகித்தலும் பணிகளைப் புரிதலும் வேண்டும்.

2. தலைவர், மேலே 1ஆம் பந்தியில் ஏற்பாடுசெய்யப்பட்ட அளவுக்குத் துணைத் தலைவர்களைத்தவிர, பணிப்பாளர் சபையினால் நிறைவேற்றப்பட்ட ஒழுங்குவிதிகளுக்கிணங்க அலுவலர்களினதும் பணியாட்டொகுதியினரினதும் ஒழுங்குபடுத்துகை, நியமனம் மற்றும் பதவிநீக்குகைக்காகப் பொறுப்புள்ளவராதல் வேண்டும்.

3. அலுவலர்களையும் பணியாட்டொகுதியினரையும் நியமிப்பதிலும் துணைத்தலைவர்களை விதந்துரைப்பதிலும், தலைவர் வினைத்திறனினதும் தொழினுட்பத் தகுதியினதும் உச்சளவிலான தரங்களை உறுதிப்படுத்துகின்ற அதியுச்ச முக்கியத்துவத்துக்கு அமைய, இயன்றளவுவரை பரந்தளவிலான பிராந்திய புவியியற்சார் அடிப்படையில் ஆளணியினரை ஆட்சேர்த்தலுக்கு உரிய கவனஞ்செலுத்துதல் வேண்டும்.

**உறுப்புரை 31 — வங்கியின் சர்வதேசத்துவம்**

1. வங்கியானது, அதன் நோக்கத்தை அல்லது பணிகளை எவ்வகையிலும் பங்கப்படுத்தக்கூடிய, வரையறுக்கக்கூடிய, மறுதலிக்கக் கூடிய அல்லது வேறுவகையில் மாற்றக்கூடிய விசேட நிதியங்கள், கடன்கள் அல்லது உதவியை ஏற்றுக்கொள்ளுதலாகாது.

2. வங்கி, அதன் தலைவர், அலுவலர்கள் மற்றும் பணியாட்டொகுதியினர், எவரேனும் உறுப்பினரின் அரசியல் அலுவல்களில் தலையிடுதலாகாது அல்லது அவர்கள், சம்பந்தப்பட்ட உறுப்பினரின் அரசியற்றன்மையின் மூலம் அவர்களின் முடிபுகளில் செல்வாக்குக்குட்படுதலாகாது. பொருளாதாரக் கரிசனைகள் மட்டுமே அவர்களின் முடிபுகளுக்கு இயைபானவையாதல் வேண்டும். வங்கியின் நோக்கத்தையும் பணிகளையும் எய்துவதற்கும் நிறைவேற்றுவதற்குமென அத்தகைய கரிசனைகள் பாரபட்சமின்றிக் கணிக்கப்படுதல் வேண்டும்.

3. வங்கியின் தலைவர், அலுவலர்கள் மற்றும் பணியாட்டொகுதியினர், தமது பதவிகளை நிறைவேற்றுவதில், தமது கடமையை முழுமையாக வங்கிக்குப் புரிதல் வேண்டும், வேறெவரேனும் அதிகாரிக்கல்ல. வங்கியின் ஒவ்வோர் உறுப்பினரும் இக்கடமையின் சர்வதேசத்துவத்துக்கு மதிப்புக்கொடுத்தல் வேண்டுமென்பதுடன், அதன் கடமைகளை நிறைவேற்றுவதில் அவற்றுள் எவற்றின்மீதும் செல்வாக்குச் செலுத்தப்படுவதற்கான எல்லா முயற்சிகளையும் தவிர்த்தலும் வேண்டும்.

## அத்தியாயம் VI

### பொது ஏற்பாடுகள்

**உறுப்புரை 32 — வங்கியின் அலுவலகங்கள்**

*1.* வங்கியின் பிரதான அலுவலகம், சீனமக்கள் குடியரசிலுள்ள பீஜிங்கில் அமைந்திருத்தல் வேண்டும்.

*2.* வங்கியானது, முகவர்நிலையங்களை அல்லது அலுவலகங்களை வேறேங்கேனும் தாபிக்கலாம்.

**உறுப்புரை 33 — தொடர்பாடல் வழி : வைப்பகங்கள்**

*1.* இவ்வுடன்படிக்கையின்கீழ் எழுகின்ற ஏதேனும் கருமம் சம்பந்தமாக வங்கி தொடர்பாடக்கூடிய தோதான அலுவலக முறையான உருவகத்தை ஒவ்வோர் உறுப்பினரும் பெயர்குறித்தல் வேண்டும்.

*2.* ஒவ்வோர் உறுப்பினரும், வங்கியானது அவ்வுறுப்பினரினது நாணய வைத்திருக்கைகளையும் வங்கியின் வேறு சொத்துக்களையும் வைத்திருக்கக்கூடிய வைப்பகமொன்றாக, அதன் மத்திய வங்கியை அல்லது வங்கியுடன் உடன்பட்டுக்கொள்ளப்படக்கூடியவாறான அத்தகைய வேறு நிறுவனத்தைப் பெயர்குறித்தல் வேண்டும்.

*3.* வங்கியானது, பணிப்பாளர் சபை தீர்மானிக்கவேண்டியவாறான அத்தகைய வைப்பகங்களிடம் அதன் சொத்துக்களை வைத்திருக்கலாம்.

**உறுப்புரை 34 — அறிக்கைகளும் தகவல்களும்**

*1.* வங்கியின் தொழிற்பாட்டுமொழி ஆங்கிலமாதல் வேண்டுமென்பதுடன், எல்லா முடிபுகளுக்காகவும் 54ஆம் உறுப்புரையின் கீழான பொருள்கோடல்களுக்காகவும் வங்கியானது இவ்வுடன்படிக்கையின் ஆங்கில உரைமீது நம்பியிருத்தலும் வேண்டும்.

*2.* வங்கியானது அதன் பணிகளைப் புரிவதற்கு வசதியளிப்பதற்கென, உறுப்பினர்கள், வங்கி அவர்களிடமிருந்து நியாயமான முறையில் வேண்டக்கூடிய அத்தகைய தகவல்களை வங்கிக்குக் கொடுத்துதவுதல் வேண்டும்.

3. வங்கியானது அதன் கணக்குகள் பற்றிய கணக்காய்வுசெய்யப்பட்ட கூற்றைக்கொண்டுள்ள வருடாந்த அறிக்கையை அதன் உறுப்பினர்களுக்கு அனுப்புதல் வேண்டுமென்பதுடன், அத்தகைய அறிக்கையை வெளியிடுதலும் வேண்டும். அதன் நிதிநிலைமைபற்றிய சுருக்கக் கூற்றையும் அதன் தொழிற்பாடுகளின் பெறுபேறுகளைக் காட்டுகின்ற இலாப நட்டக் கூற்றையும் அதன் உறுப்பினர்களுக்கு ஒவ்வொரு காலாண்டும் அது அனுப்புதலும் வேண்டும்.

4. வங்கியானது அதன் தொழிற்பாடுகளில் வெளிப்படையான தன்மையை மேம்படுத்துவதற்கெனத் தகவல்களை வெளிவிடுவதன் மீதான கொள்கையொன்றை நிலைநாட்டுதல் வேண்டும். வங்கியானது அதன் நோக்கத்தையும் பணிகளையும் நிறைவேற்றுவதில் விரும்பத்தக்கதென அது கருதுகின்றவாறு அத்தகைய அறிக்கைகளை வெளியிடலாம்.

**உறுப்புரை 35 — உறுப்பினர்களுடனும் சர்வதேச ஒழுங்கமைப்புகளுடனும் ஒத்துழைத்தல்**

1. வங்கியானது, அதன் எல்லா உறுப்பினர்களுடனும், இவ்வுடன்படிக்கையின் நியதிகளினுள் தோதானதென அது கருதக்கூடியவாறான அத்தகைய முறையில் ஏனைய சர்வதேச நிதிநிறுவனங்களுடனும் மற்றும் பிராந்தியத்தின் அல்லது வங்கியின் தொழிற்பாட்டு இடப்பரப்புகளின் பொருளாதார அபிவிருத்தியுடன் சம்பந்தப்பட்ட சர்வதேச ஒழுங்கமைப்புகளுடனும் நெருங்கிய ஒத்துழைப்புடன் பணிபுரிதல் வேண்டும்.

2. வங்கியானது, பணிப்பாளர் சபையின் அங்கீகாரத்துடன், இவ்வுடன்படிக்கையுடன் ஒத்ததாகவிருக்கும் நோக்கங்களுக்காக அத்தகைய ஒழுங்கமைப்புகளுடன் ஒழுங்கேற்பாடுகளைச் செய்துகொள்ளலாம்.

**உறுப்புரை 36 — குறிப்பீடுகள்**

1. உறுப்புரை அல்லது அட்டவணை பற்றி இவ்வுடன்படிக்கையிலான குறிப்பீடுகள், வேறுவகையாகக் குறித்துரைக்கப்பட்டாலொழிய, இவ்வுடன்படிக்கையின் உறுப்புரைகளையும் அட்டவணைகளையும் குறிப்பீடுசெய்கின்றன.

2. இவ்வுடன்படிக்கையில் குறிப்பிட்ட பாலுக்கான குறிப்பீடுகள் ஏதேனும் பாலுக்கு சமமானமுறையில் ஏற்புடையற்பாலனவாதல் வேண்டும்.

## அத்தியாயம் VII

### உறுப்பினர்கள் விலகுதலும் அவர்களை இடைநிறுத்துதலும்

**உறுப்புரை 37 — உறுப்பாண்மையிலிருந்து விலகுதல்**

*1.* ஏதேனும் உறுப்பினர், வங்கியின் பிரதான அலுவலகத்தில் எழுத்திலான அறிவித்தலொன்றை அதற்கு ஒப்படைப்பதன்மூலம் எந்நேரத்திலும் வங்கியிலிருந்து விலகலாம்.

*2.* உறுப்பினரொன்றின் விலகுகை, அதன் அறிவித்தலில் குறித்துரைக்கப்பட்ட தேதியன்று ஆனால் எப்பட்சத்திலும் வங்கியினால் அவ்வறிவித்தல் பெறப்பட்டுள்ள தேதிக்குப்பின்னர் ஆறு (6) மாதங்களுக்குக் குறையாமல் பயனுறுவதாக வருதலும், அதன் உறுப்பாண்மை இல்லாதொழிதலும் வேண்டும். எவ்வாறாயினும், விலகுகை இறுதியாகப் பயனுறுவதாக வருவதற்கு முன்னர் எந்நேரத்திலும் அவ்வுறுப்பினர், விலகுகை பற்றிய அதன் உட்கருத்துத் தொடர்பான அதன் அறிவித்தலை இல்லாதாக்குதல் பற்றி எழுத்தில் வங்கிக்கு அறிவிக்கலாம்.

*3.* விலகுகின்ற உறுப்பினர், அது விலகுகை பற்றிய அறிவித்தலை ஒப்படைத்த தேதியில் வங்கிக்கான எந்த நேரடியான மற்றும் எதிர்பாராத கடப்பாடுகள் எல்லாவற்றுக்கும் அமைந்ததாகவிருந்ததோ அந்த நேரடியான மற்றும் எதிர்பாராத கடப்பாடுகள் எல்லாவற்றுக்கும் பொறுப்பாதல் வேண்டும். விலகுகை இறுதியாகப் பயனுறுவதாக வந்தால், உறுப்பினர், வங்கியினால் விலகுகை பற்றியஅறிவித்தல் பெறப்பட்ட தேதிக்குப்பின்னர் செய்யப்பட்ட தொழிற்பாடுகளிலிருந்து விளைகின்ற கடப்பாடுகளுக்காக ஏதேனும் பொறுப்பை உறுதலாகாது.

**உறுப்புரை 38 — உறுப்பாண்மையை இடைநிறுத்துதல்**

*1.* ஏதேனும் உறுப்பினர் வங்கிக்கான அதன் கடப்பாடுகளுள் எவற்றையும் நிறைவேற்றுவதற்குத் தவறினால், ஆளுநர் சபை 28 ஆம் உறுப்புரையில் ஏற்பாடுசெய்யப்பட்டவாறாக மீயுயர் பெரும்பான்மை வாக்கின்மூலம் அத்தகைய உறுப்பினரை இடைநிறுத்தலாம்.

*2.* அவ்வாறு இடைநிறுத்தப்பட்ட உறுப்பினர், உறுப்பினரை நன்னிலைக்கு மீட்டெடுப்பதற்கு 28ஆம் உறுப்புரையில் ஏற்பாடு செய்யப்பட்டவாறாக மீயுயர் பெரும்பான்மைவாக்கின்மூலம் ஆளுநர் சபை முடிபுசெய்தாலொழிய, அது இடைநிறுத்தப்பட்ட தேதியிலிருந்து ஓர் (1) ஆண்டுக்குப்பின்னர் தானாகவே உறுப்பினராக இல்லாதொழிதல் வேண்டும்.

*3.* இடைநிறுத்துகையின்கீழ் இருக்கையில், உறுப்பினரொன்று, விலகுகைக்கான உரிமைதவிர, இவ்வுடன்படிக்கையின்கீழான எவையேனும் உரிமைகளைப் பிரயோகிப்பதற்கு உரித்துடையதாதலாகாது ஆனால் அதன் எல்லாக் கடப்பாடுகளுக்கும் அமைந்ததாதல் வேண்டும்.

**உறுப்புரை 39 — கணக்குகளைக் கொடுத்துத்தீர்த்தல்**

*1.* நாடொன்று உறுப்பினராக இல்லாதொழிகின்ற தேதிக்குப்பின்னர், அது உறுப்பினராக இல்லாதொழிவதற்கு முன்னர் செய்துகொள்ளப்பட்ட (இதனகத்துப்பின்னர், வேறு நிதியளிப்பு) 11ஆம் உறுப்புரையின் பந்தி 2 (vi) இன்கீழான கடன்கள், உத்தரவாதங்கள், ஒப்புரவு முதலீடுகள் அல்லது வேறுவகையினவான நிதியளிப்பு என்பவற்றின் ஏதேனும் பாகம் நிலுவையாகவிருக்கும்வரை அது வங்கிக்கான நேரடியான கடப்பாடுகளுக்காகவும் வங்கிக்கான அதன் எதிர்பாராத பொறுப்புக்களுக்காகவும் பொறுப்பாதல் வேண்டும், ஆனால் அதன் பின்னர் வங்கியினால் செய்துகொள்ளப்பட்ட கடன்கள், உத்தரவாதங்கள், ஒப்புரவு முதலீடுகள் அல்லது வேறு நிதியளிப்புத் தொடர்பில் பொறுப்புக்களை அது உறுதலாகாது அல்லது வங்கியின் ஒன்றில் வருமானத்தில் அல்லது செலவுகளில் பங்கேற்றலாகாது.

*2.* நாடொன்று உறுப்பினராக இல்லாதொழியும் நேரத்தில், இவ்வுறுப்புரையின் 3 ஆம், 4 ஆம் பந்திகளின் ஏற்பாடுகளுக்கிணங்க அத்தகைய நாட்டுடன் கணக்குகளைக் கொடுத்துத்தீர்ப்பதன் பாகமாக வங்கியினால் அத்தகைய நாட்டின் பங்குகள் மீள்கொள்வனவு செய்யப்படுவதற்காக ஒழுங்கேற்பாடு செய்தல் வேண்டும். இந்நோக்கத்துக்காக, பங்குகளின் மீள்கொள்வனவு விலை, அந்நாடு எத்தேதியன்று உறுப்பினராக இல்லாதொழிகின்றதோ அத்தேதியன்று வங்கியின் புத்தகங்களின் மூலம் காட்டப்பட்ட பெறுமதியாதல் வேண்டும்.

*3.* இவ்வுறுப்புரையின் கீழ் வங்கியினால் மீள்கொள்வனவு செய்யப்பட்ட பங்குகளுக்கான கொடுப்பனவு, பின்வரும் நிபந்தனைகளினால் ஆளப்படுதல் வேண்டும்:-

(i) சம்பந்தப்பட்ட நாட்டின் பங்குகளுக்காக அதற்கு வருமதியாகவுள்ள ஏதேனும் தொகை, ஒப்புரவு முதலீடு அல்லது வேறு நிதியளிப்புத் தொடர்பில் கடன்பெறுநராக, உத்தரவாதமளிப்பவராக அல்லது வேறு ஒப்பந்தஞ்செய்யும் திறத்தவராக அந்நாடு, அதன் மத்திய வங்கி அல்லது அதன் முகவர் நிலையங்கள், நிமித்தநிறுவகங்கள் அல்லது அரசியல்

உட்பிரிவுகள் வங்கிக்குப் பொறுப்பாகவிருக்கும்வரை பிடித்துவைக்கப்படுதல் வேண்டுமென்பதுடன், அத்தகைய தொகை வங்கியின் விருப்புத்தெரிவின்பேரில், அத்தகைய ஏதேனும் பொறுப்பு முதிர்வடைகின்றவாறு அதன்மீது பயன்படுத்தவும்படலாம். 6ஆம் உறுப்புரையின் 3 ஆம் பந்திக்கிணங்க பங்குகளுக்கான நாட்டின் ஒப்பப்பணத்தின் மீதான எதிர்கால அழைப்புகளுக்காக அதன் எதிர்பாராத பொறுப்புக்காரணமாகத் தொகையெதுவும் பிடித்துவைக்கப் படுதலாகாது. எப்பட்சத்திலும், உறுப்பினரொன்றின் பங்குகளுக்காக அதற்கு வருமதியாகவுள்ள தொகையெதுவும், நாடானது உறுப்பினராக இல்லாதொழிகின்ற தேதிக்குப் பின்னர் ஆறு (6) மாதங்கள்வரை செலுத்தப்படலாகாது.

(ii) இவ்வுறுப்புரையின் 2 ஆம் பந்திக்கிணங்க மீள்கொடுப்பனவு விலையாக வருமதியாகவுள்ள தொகை முன்னைய உறுப்பினர் முழு மீள்கொடுப்பனவு விலையையும் பெறும் வரை, இப்பந்தியின் (i) ஆம் உட்பந்தியிற் குறிப்பீடுசெய்யப்பட்ட கடன்கள், உத்தரவாதங்கள், ஒப்புரவு முதலீடுகள் மற்றும் வேறு நிதியளிப்பு என்பவற்றின் மீதான பொறுப்புக்களின் கூட்டுமொத்தத்தொகையை விஞ்சுகின்ற அளவுக்கு, சம்பந்தப் பட்ட நாட்டினால் தொடர்புபட்ட பங்குத்தொகுதிச் சான்றிதழ் கள் ஒப்படைக்கப்படுவதன் மேல், பங்குகளுக்கான கொடுப் பனவுகள் காலத்துக்குக்காலம் செய்யப்படலாம்.

(iii) வங்கி தீர்மானிக்கின்றவாறான அத்தகைய கிடைக்கக்கூடிய நாணயங்களில், அதன் நிதிநிலைமையைக் கணக்குக்கெடுத்து, கொடுப்பனவுகள் செய்யப்படுதல் வேண்டும்.

(iv) நாடொன்று உறுப்பினராக இல்லாதொழிந்த தேதியன்று நிலுவையாகவிருந்த எவையேனும் கடன்கள், உத்தரவாதங் கள், ஒப்புரவு முதலீடுகள் அல்லது வேறு நிதியளிப்பு என்பவற்றின்மீது வங்கியினால் நட்டங்கள் உறப்பட்டால் மற்றும் அத்தகைய நட்டங்களின் தொகை அத்தேதியன்று நட்டங்களுக்கெதிராக வழங்கப்பட்ட ஒதுக்குத்தொகையை விஞ்சினால், சம்பந்தப்பட்ட நாடு, கோரிக்கையின் மீது, மீள்கொடுப்பனவு விலை தீர்மானிக்கப்பட்டபோது நட்டங்கள் கணக்குக்கெடுக்கப்பட்டிருப்பின் அதன் பங்குகளின் மீள்கொள்வனவு விலை எந்தத் தொகையினால் குறைக்கப் பட்டிருந்திருக்குமோ அந்தத் தொகையை மீளச்செலுத்துதல்

வேண்டும். அத்துடன் சேர்த்து மேலதிகமாக, முன்னைய உறுப்பினர், அதன் பங்குகளின் மீள்கொள்வனவு விலை தீர்மானிக்கப்பட்ட நேரத்தில் மூலதனத்தின் பாதிப்பு ஏற்பட்டிருந்து அழைப்புச் செய்யப்பட்டிருப்பின் பதிலிறுப்ப தற்கு அது தேவைப்படுத்தப்பட்டிருக்கும் அதே அளவுக்கு 6 ஆம் உறுப்புரையின் 3 ஆம் பந்திக்கிணங்கச் செலுத்தப்படாத ஒப்பப்பணங்களுக்கான ஏதேனும் அழைப்பின் மீது பொறுப்பாதல் வேண்டும்.

4. ஏதேனும் நாடு உறுப்பினராக இல்லாதொழிகின்ற தேதியன்றி லிருந்து ஆறு (6) மாதங்களினுள் 41 ஆம் உறுப்புரையினைப் பின்பற்றி வங்கி அதன் தொழிற்பாடுகளை முடிவுறுத்தினால், சம்பந்தப்பட்ட நாட்டின் எல்லா உரிமைகளும் 41 முதல் 43 வரையிலான உறுப்புரை களின் ஏற்பாடுகளுக்கிணங்கத் தீர்மானிக்கப்படுதல் வேண்டும். அத்தகைய நாடு, அத்தகைய உறுப்புரைகளின் நோக்கங்களுக்காகத் தொடர்ந்தும் உறுப்பினராகக் கருதப்படுதல் வேண்டும் ஆனால் வாக்களிப்பதற்கான உரிமைகளைக் கொண்டிருத்தலாகாது.

## அத்தியாயம் VIII

## வங்கியின் தொழிற்பாடுகளை இடைநிறுத்துதலும் முடிவுறுத்துதலும்

### உறுப்புரை 40 — தொழிற்பாடுகளின் தற்காலிக இடைநிறுத்துகை

அவசரநிலைமையில், பணிப்பாளர் சபை, ஆளுநர் சபையினால் மேலதிகக் கவனத்துட்கொள்ளுதலுக்கும் நடவடிக்கைக்குமான வாய்ப்பை எதிர்பார்த்து, 11 ஆம் உறுப்புரையின் உட்பந்தி 2 (vi) இன்கீழ் புதிய கடன்கள், உத்தரவாதங்கள், ஒப்புரவு முதலீடு மற்றும் வேறு வகை யினவான நிதியளிப்பு என்பன தொடர்பில் தற்காலிகமாகத்தொழிற் பாடுகளை இடைநிறுத்தலாம்.

### உறுப்புரை 41 — தொழிற்பாடுகளை முடிவுறுத்துதல்

1. வங்கியானது, 28ஆம் உறுப்புரையில் ஏற்பாடுசெய்யப்பட்டவாறாக மீயுயர் பெரும்பான்மை வாக்கின் மூலம் அங்கீகரிக்கப்பட்ட ஆளுநர் சபையின் தீர்மானத்தினால் அதன் தொழிற்பாடுகளை முடிவுறுத்த லாம்.

2. அத்தகைய முடிவுறுத்துகைக்குப்பின்னர், வங்கியானது, அதன் சொத்துக்களின் ஒழுங்கான தேறிப்பெறுகை, பேணுகை மற்றும் பேணிக்காப்பு மற்றும் அதன் கடப்பாடுகளைக் கொடுத்தீர்த்தல் என்பன வற்றின் இடைநேர்விளைவானவை தவிர, எல்லாச் செயற்பாடுகளி லிருந்தும் உடனடியாக இல்லாதொழிதல் வேண்டும்.

**உறுப்புரை 42 — உறுப்பினர்களின் பொறுப்பும் உரிமைக்கோரிக் கைகளைக் கொடுப்பனவுசெய்தலும்**

1. வங்கியின் தொழிற்பாடு முடிவுறுத்தப்படும் பட்சத்தில், வங்கியின் மூலதனப் பங்குத்தொகுதிக்கான அழைக்கப்படாத ஒப்பப்பணங்களுக் காகவும் எல்லா உறுப்பினர்களினதும் நாணயங்களினது மதிப்பிறக்கம் தொடர்பிலும் அவற்றின் பொறுப்பு, எதிர்பாராத உரிமைக்கோரிக்கைகள் உட்பட, கடன்கொடுத்தோரின் எல்லா உரிமைக்கோரிக்கைகளும் கொடுத்துத்தீர்க்கப்படும்வரை தொடர்ந்திருத்தல் வேண்டும்.

2. நேரடியான உரிமைக்கோரிக்கைகளை வைத்திருக்கின்ற எல்லாக் கடன்கொடுத்தோருக்கும் முதலில் வங்கியின் சொத்துக்களிலிருந்தும் பின்னர் வங்கிக்கான கொடுப்பனவுகளிலிருந்தும் அல்லது செலுத்தப் படாத அல்லது அழைக்கப்படற்பாலனவான ஒப்பப்பணங்களிலிருந்தும் செலுத்தப்படுதல் வேண்டும். நேரடியான உரிமைக்கோரிக்கைகளை வைத்திருக்கின்ற கடன்கொடுத்தோருக்கு எவையேனும் கொடுப்பனவு களைச் செய்யுமுன்னர், பணிப்பாளர் சபை, நேரடியான மற்றும் எதிர்பாராத உரிமைக்கோரிக்கைகளை வைத்திருப்போருக்கிடையே வீதப்படியான பகிர்ந்தளிப்பை உறுதிப்படுத்துவதற்கு, அதன் கருத் தெடுப்பில் அவசியமானவாறான அத்தகைய ஒழுங்கேற்பாடுகளைச் செய்தல் வேண்டும்.

**உறுப்புரை 43 — சொத்துக்களைப் பகிர்ந்தளித்தல்**

1. சொத்துக்களின் பகிர்ந்தளிப்பெதுவும், வங்கியின் மூலதனப் பங்குத்தொகுதிக்கான உறுப்பினர்களின் ஒப்பப்பணங்களினது காரண மாக, பின்வருவனவரை செய்யப்படுதலாகாது:-

(i) கடன்கொடுத்தோருக்கான எல்லாப் பொறுப்புக்களும் கொடுத்துத்தீர்க்கப்பட்டிருக்கும்வரை அல்லது அவற்றுக்கு ஏற்பாடு செய்யப்பட்டிருக்கும் வரை; அத்துடன்

(ii) அத்தகைய பகிர்ந்தளிப்பைச் செய்வதற்கு, ஆளுநர் சபை 28ஆம் உறுப்புரையில் ஏற்பாடுசெய்யப்பட்டவாறாக மீயுயர் பெரும்பான்மை வாக்கின் மூலம் முடிபு செய்துள்ளவரை.

2. உறுப்பினர்களுக்கு வங்கியின் சொத்துக்களினது ஏதேனும் பகிர்ந்தளிப்பு ஒவ்வோர் உறுப்பினரினாலும் வைத்திருக்கப்பட்ட மூலதனப் பங்குத்தொகுதியின் விகிதாசாரத்திலிருத்தல் வேண்டுமென்பதுடன், வங்கி நியாயமானவையும் ஒப்புரவானவையும் எனக் கருதவேண்டிய அத்தகைய நேரங்களிலும் அத்தகைய நிபந்தனைகளின் கீழும் செய்யப்படுதலும் வேண்டும். பகிர்ந்தளிக்கப்பட்ட சொத்துக்களின் பங்குகள், சொத்தின் வகை தொடர்பாக ஒருசீரானவையாக இருக்க வேண்டியனவல்ல. உறுப்பினரெதுவும், வங்கிக்கான அதன் கடப்பாடுகள் எல்லாவற்றையும் அது கொடுத்துத்தீர்க்கும்வரை சொத்துக்களின் அத்தகையவொரு பகிர்ந்தளிப்பில் அதன் பங்கைப் பெறுவதற்கு உரித்துடையதாதலாகாது.

3. இவ்வுறுப்புரையினைப் பின்பற்றிப் பகிர்ந்தளிக்கப்பட்ட சொத்துக்களைப் பெறுகின்ற ஏதேனும் உறுப்பினர், அத்தகைய சொத்துக்கள் பகிர்ந்தளிக்கப்படுமுன்னர் அவை தொடர்பில் வங்கி துய்த்த அதே உரிமைகளைத் துய்த்தல் வேண்டும்.

## அத்தியாயம் IX

## அந்தஸ்து, விடுபாட்டுரிமைகள், சிறப்புரிமைகள் மற்றும் விலக்களிப்புகள்

**உறுப்புரை 44 — அத்தியாயத்தின் நோக்கங்கள்**

1. வங்கி அதன் நோக்கத்தை நிறைவேற்றி அதற்குப் பொறுப்பிக்கப்பட்ட பணிகளை நிறைவேற்றுவதனை இயலச்செய்வதற்கு, இவ்வத்தியாயத்தில் எடுத்துக் கூறப்பட்ட அந்தஸ்து, விடுபாட்டுரிமைகள், சிறப்புரிமைகள் மற்றும் விலக்களிப்புகள், ஒவ்வோர் உறுப்பினரினதும் ஆள்புலத்தில் வங்கிக்கு அளிக்கப்படுதல் வேண்டும்.

2. ஒவ்வோர் உறுப்பினரும், இவ்வத்தியாயத்தில் எடுத்துக்கூறப்பட்ட ஏற்பாடுகளை அதன் சொந்த ஆள்புலத்தில் பயனுறச்செய்வதற்கு அவசியமானவாறான அத்தகைய நடவடிக்கையை உடனடியாக எடுத்தலும் அது எடுத்துள்ள நடவடிக்கைபற்றி வங்கிக்கு அறிவித்தலும் வேண்டும்.

**உறுப்புரை 45 — வங்கியின் அந்தஸ்து**

வங்கியானது முழுச் சட்டமுறையான ஆளுமையையும் குறிப்பாகப் பின் வருவனவற்றுக்கான முழுச் சட்டவாற்றலையும் உடையதாதல் வேண்டும்:-

(i) ஒப்பந்தஞ் செய்வதற்கும்;

(ii) அசைவற்ற, அசைவுள்ள ஆதனத்தைக் கொள்வதற்கும், கையுதிர்ப்பதற்கும்;

(iii) சட்ட வழக்குநடவடிக்கைகளைத் தொடுப்பதற்கும் அவற்றுக்குப் பதிலிறுப்பதற்கும்; அத்துடன்

(iv) அதன் நோக்கத்துக்காகவும் செயற்பாடுகளுக்காகவும் அவசியமாகவிருக்கக்கூடியவாறான அல்லது பயனுள்ளதாகவிருக்கக் கூடியவாறான அத்தகைய வேறு நடவடிக்கையை எடுப்பதற்கும்.

**உறுப்புரை 46 — நீதிமுறை வழக்கு நடவடிக்கைகளிலிருந்தான விடுபாட்டுரிமை**

1. வங்கியானது, கடன்பெறுகைகள் அல்லது வேறு வழிவகைகள் மூலம் நிதிகளைத் திரட்டுவதற்கு, கடப்பாடுகளுக்கு உத்தரவாதமளிப்பதற்கு, அல்லது பிணையங்களை வாங்குவதற்கு அல்லது விற்பனை செய்வதற்கு அல்லது விற்பனையை ஒப்புறுதியீடுசெய்வதற்கு அதன் தத்துவங்களைப் பிரயோகிப்பதிலிருந்து அல்லது அது சம்பந்தமாக எழுகின்ற விடயங்களிற்றவிர, ஒவ்வொரு வகையினதுமான சட்ட நடைமுறையிலிருந்தும் விடுபாட்டுரிமையைத் துய்த்தல் வேண்டும்; அவ்விடயங்களில், வங்கியானது அலுவலகமொன்றைக் கொண்டுள்ள, அல்லது மன்றாணை முதலியனவற்றின் சேர்ப்பிப்பை அல்லது அறிவித்தலை ஏற்றுக்கொள்ளும் நோக்கத்துக்காக முகவரொருவரை நியமித்துள்ள, அல்லது பிணையங்களை வழங்கியுள்ள அல்லது உத்தரவாதமளித்துள்ள நாடொன்றின் ஆள்புலத்திலுள்ள தகுதிவாய்ந்த நியாயாதிக்கமுள்ளவொரு நீதிமன்றத்தில் மட்டுமே வங்கிக்கெதிரான வழக்குகள் கொணரப்படலாம்.

2. இவ்வுறுப்புரையின் 1 ஆம் பந்தியின் ஏற்பாடுகள் எவ்வாறிருப்பினும், ஏதேனும் உறுப்பினரினால் அல்லது உறுப்பினரொன்றின் ஏதேனும் முகவர்நிலையத்திற்காக அல்லது நிமித்தநிறுவகத்திற்காக

அல்லது உறுப்பினருக்காக அல்லது உறுப்பினரின் ஏதேனும் முகவர் நிலையத்திற்காக அல்லது நிமித்த நிறுவகத்திற்காக நேரடியாக அல்லது நேரடியாகவல்லாமல் செயலாற்றுகின்ற அல்லது அவற்றிலிருந்து உரிமைக்கோரிக்கைகள் வந்துறப்பெறுகின்ற ஏதேனும் உருவகத்தினால் அல்லது ஆளினால் வங்கிக்கெதிராக வழக்கெதுவும் கொணரப்படுத லாகாது. இவ்வுடன்படிக்கையில், வங்கியின் துணை விதிகளில் மற்றும் ஒழுங்குவிதிகளில் அல்லது வங்கியுடன் செய்துகொள்ளப்பட்ட ஒப்பந்தங்களில் விதித்துரைக்கப்படக்கூடியவாறாக வங்கிக்கும் அதன் உறுப்பினர்களுக்குமிடையேயான பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கான அத்தகைய விசேட நடவடிக்கைமுறைகளை உறுப்பினர்கள் பின்பற்றுதல் வேண்டும்.

3. வங்கியின் ஆதனங்களும் சொத்துக்களும், எங்கு அமைந்திருந் தாலும் மற்றும் எவரினால் வைத்திருக்கப்பட்டாலும், வங்கிக்கெதிராக இறுதித் தீர்ப்பு அளிக்கப்படுமுன்னர் எல்லா வகையினவையுமான கைப்பற்றுகை, நடுக்கட்டல் அல்லது நிறைவேற்றுகையிலிருந்து விடுபட்டனவாதல் வேண்டும்.

**உறுப்புரை 47 — சொத்துக்களினதும் சுவடிக்கூடங்களினதும் விடு பாட்டுரிமை**

1. வங்கியின் ஆதனங்களும் சொத்துக்களும், எங்கு அமைந்திருந் தாலும் மற்றும் எவரினால் வைத்திருக்கப்பட்டாலும், தேடுகை, தேவைக் கெடுத்தல், பறிமுதல், சொத்தெடுப்பு அல்லது நிறைவேற்று அல்லது சட்டவாக்க நடவடிக்கைமூலம் வேறெவ்வகையிலும் எடுத்துக்கொள் ளப்படுதல் அல்லது மீட்டுரிமை அடைப்பு என்பவற்றிலிருந்து விடு பட்டனவாதல் வேண்டும்.

2. வங்கியின் சுவடிக்கூடம் மற்றும், பொதுவாக, அதற்குச் சொந்தமான அல்லது அதனால் வைத்திருக்கப்பட்ட எல்லா ஆவணங்களும், எங்கு அமைந்திருந்தாலும் மற்றும் எவரினால் வைத்திருக்கப்பட்டாலும் பங்கப் படுத்தவியலாததாதல் வேண்டும்.

**உறுப்புரை 48 — மட்டுப்பாடுகளிலிருந்து சொத்துக்களுக்குள்ள சுதந்திரம்**

வங்கியின் நோக்கத்தையும் பணிகளையும் பயனுற நிறைவேற்றுவதற்கு அவசியமான அளவுவரையும், இவ்வுடன்படிக்கையின் ஏற்பாடுகளுக் கமையவும் வங்கியின் எல்லா ஆதனங்களும் சொத்துக்களும், எத்தன்மை யினவையுமான மட்டுப்பாடுகள், ஒழுங்குவிதிகள், கட்டுப்பாடுகள் மற்றும் காலப்பிற்போடுதல்கள் என்பனவற்றனவாகவிருத்தல் வேண்டும்.

**உறுப்புரை 49 — தொடர்பாடல்களுக்கான சிறப்புரிமை**

வங்கியின் அலுவலகமுறையான தொடர்பாடல்களுக்கு, ஒவ்வோர் உறுப்பினரினாலும் வேறேதேனும் உறுப்பினரின் அலுவலகமுறையான தொடர்பாடல்களுக்கு அது அளிக்கும் அதேவிதமான நடாத்துகை அளிக்கப்படுதல் வேண்டும்.

**உறுப்புரை 50 — அலுவலர்களினதும் ஊழியர்களினதும் விடுபாட்டுரிமைகளும் சிறப்புரிமைகளும்**

வங்கிக்கான பணிகளை அல்லது சேவைகளைப் புரிகின்ற நிபுணர்களும் ஆலோசகர்களுமுட்பட, வங்கியின் எல்லா ஆளுநர்களும், பணிப்பாளர்களும், மாற்றாட்களும், தலைவரும் துணைத்தலைவர்களும், ஏனைய அலுவலர்களும் ஊழியர்களும்:

(i) விடுபாட்டுரிமையை வங்கி விட்டுக்கொடுக்கும்போது தவிர, தமது அலுவலகமுறையான தன்மையில் அவர்களினால் புரியப்பட்ட செயல்கள் தொடர்பில் சட்ட நடைமுறையிலிருந்து விடுபட்டோராதல் வேண்டுமென்பதுடன், தமது அலுவலகமுறையான பத்திரங்கள், ஆவணங்கள் மற்றும் பதிவேடுகள் எல்லாம் தொடர்பாகப் பங்கப்படுத்தவியலாமையைத் துய்த்தலும் வேண்டும்;

(ii) அவர்கள் உள்நாட்டுப் பிரசைகளாக அல்லது நாட்டவர்களாக இராதவிடத்து, ஏனைய உறுப்பினர்களின் ஒத்த பதவி வரிசையிலுள்ள பிரதிநிதிகளுக்கும், அலுவலர்களுக்கும், ஊழியர்களுக்கும் அளிக்கப்படுகின்றவாறான, குடிவரவு மட்டுப்பாடுகள், பிறநாட்டுப் பதிவுத் தேவைப்பாடுகள் மற்றும் தேசிய சேவைக் கடப்பாடுகள் என்பவற்றிலிருந்து அதே விடுபாட்டுரிமைகளும், செலாவணி ஒழுங்குவிதிகள் தொடர்பாக அதேவிதமான வசதிகளும் அவர்களுக்கு அளிக்கப்படுதல் வேண்டும்; அத்துடன்

(iii) ஏனைய உறுப்பினர்களின் ஒத்த பதவிவரிசையிலுள்ள பிரதிநிதிகளுக்கும், அலுவலர்களுக்கும், ஊழியர்களுக்கும் உறுப்பினர்களினால் அளிக்கப்படுகின்றவாறான பயணவசதிகள் தொடர்பில் அதே நடாத்துகை வழங்கப்படுதல் வேண்டும்.

**உறுப்புரை 51 — வரிவிதிப்பிலிருந்து விலக்களித்தல்**

*1.* இவ்வுடன்படிக்கையைப் பின்பற்றி, வங்கி, அதன் சொத்துக்கள், ஆதனங்கள், வருமானமும் தொழிற்பாடுகளும் கொடுக்கல்வாங்கல்களும் என்பன எல்லா வரிவிதிப்பிலிருந்தும் எல்லாச் சுங்கத் தீர்வைகளிலிருந்தும் விலக்களிக்கப்படுதல் வேண்டும். ஏதேனும் வரியை அல்லது தீர்வையைக் கொடுப்பனவு செய்வதற்கான, பிடித்துவைப்பதற்கான அல்லது சேகரிப்பதற்கான ஏதேனும் கடப்பாட்டிலிருந்து வங்கி விலக்களிக்கப்படுதலும் வேண்டும்.

*2.* உறுப்பினரொன்று, அதன் ஏற்புறுதி, ஏற்றுக்கொள்கை அல்லது அங்கீகாரச் சாதனத்துடன், அத்தகைய உறுப்பினர் அதற்காகவும் அதன் அரசியல் உட்பிரிவுகளுக்காகவும், அத்தகைய உறுப்பினரின் பிரசைகளுக்கு அல்லது நாட்டவர்களுக்கு வங்கியினால் செலுத்தப்பட்ட, விடயத்துக்கேற்ப, சம்பளங்கள் மற்றும் வேதனாதிகள்மீது வரிவிதிப்பதற்கான உரிமையை வைத்திருக்கின்றதென்ற வெளிப்படுத்துகையை வைப்பிடுமிடத்துத்தவிர, வங்கிக்காகப் பணிகளை அல்லது சேவைகளைப் புரிகின்ற நிபுணர்களும் ஆலோசகர்களுமுட்பட, வங்கியின் பணிப்பாளர்கள், மாற்றுப் பணிப்பாளர்கள், தலைவர், துணைத் தலைவர்கள், மற்றும் வேறு அலுவலர்கள் அல்லது ஊழியர்கள் என்போருக்கு வங்கியினால் செலுத்தப்பட்ட, விடயத்துக்கேற்ப, சம்பளங்கள், வேதனாதிகள் மற்றும் செலவுகள்மீது அல்லது அவை தொடர்பில் எவ்வகையினதுமான வரியெதுவும் அறவிடப்படுதலாகாது.

*3.* எவரினாலும் வைத்திருக்கப்பட்ட, ஏதேனும் கடப்பாட்டின் அல்லது பிணையத்தின்மீதான ஏதேனும் பங்கிலாபம் அல்லது வட்டியுட்பட, வங்கியினால் வழங்கப்பட்ட ஏதேனும் கடப்பாட்டின் அல்லது பிணையத்தின் மீது பின்வருமாறாயின் எவ்வகையினதுமான வரியெதுவும் அறவிடப்படுதலாகாது:-

(i) அத்தகைய கடப்பாடு அல்லது பிணையம் வங்கியினால் வழங்கப்பட்டதென்ற காரணத்துக்காக மட்டுமே அதற்கெதிராக ஓரங்காட்டப்படுகின்றதாயின்; அல்லது

(ii) அத்தகைய வரிவிதிப்புக்கான தனிநியாயாதிக்கஞ்சார் அடிப்படை, அது வழங்கப்பட்ட, செலுத்தப்படற்பாலதாக்கப்பட்ட அல்லது செலுத்தப்பட்ட இடமாகவிருப்பின் அல்லது நாணயமாகவிருப்பின் அல்லது வங்கியினால் பேணப்பட்ட ஏதேனும் அலுவலகத்தின் அல்லது தொழிலிடத்தின் அமைவிடமாகவிருப்பின்.

*4.* எவரினாலும் வைத்திருக்கப்பட்ட, ஏதேனும் கடப்பாட்டின் அல்லது பிணையத்தின்மீதான ஏதேனும் பங்கிலாபம் அல்லது வட்டியுட்பட, வங்கியினால் உத்தரவாதமளிக்கப்பட்ட ஏதேனும் கடப்பாட்டின் அல்லது பிணையத்தின்மீது பின்வருமாறாயின் எவ்வகையினதுமான வரியெதுவும் அறவிடப்படுதலாகாது:-

(i) அத்தகைய கடப்பாடு அல்லது பிணையம் வங்கியினால் உத்தரவாதமளிக்கப்பட்டதென்ற காரணத்துக்காக மட்டுமே அதற்கெதிராக ஓரங்காட்டப்படுகின்றதாயின்; அல்லது

(ii) அத்தகைய வரிவிதிப்புக்கான தனிநியாயாதிக்கஞ்சார் அடிப்படை, வங்கியினால் பேணப்பட்ட ஏதேனும் அலுவலகத்தின் அல்லது தொழிலிடத்தின் அமைவிடமாகவிருப்பின்.

**உறுப்புரை 52 — விட்டுக்கொடுத்தல்கள்**

*1.* வங்கியானது, அதன் தற்றுணிபில், வங்கியின் மிகச்சிறந்த நலன்கருதி தோதானவையெனத் தீர்மானிக்கக்கூடியவாறான அத்தகைய முறையிலும் அத்தகைய நிபந்தனைகளின் மேலும், ஏதேனும் விடயத்தில் அல்லது சந்தர்ப்பத்தில் இவ்வத்தியாயத்தின் கீழ் அளிக்கப்பட்ட சிறப்புரிமைகள், விடுபாட்டுரிமைகள் மற்றும் விலக்களிப்புக்கள் என்பவற்றுள் எவற்றையும் விட்டுக்கொடுக்கலாம்.

## அத்தியாயம் X

### திருத்தமும், பொருள்கோடலும், நடுத்தீர்ப்பும்

**உறுப்புரை 53 — திருத்தங்கள்**

*1.* இவ்வுடன்படிக்கை, 28 ஆம் உறுப்புரையில் ஏற்பாடு செய்யப்பட்டவாறு மீயுயர் பெரும்பான்மை வாக்கின்மூலம் அங்கீகரிக்கப்பட்ட ஆளுநர் சபையின் தீர்மானமொன்றின்மூலம் மட்டுமே திருத்தப்படலாம்.

*2.* இவ்வுறுப்புரையின் 1 ஆம் பந்தியின் ஏற்பாடுகள் எவ்வாறிருப்பினும், பின்வருவனவற்றைத் திரிபுபடுத்துகின்ற ஏதேனும் திருத்தத்தின் அங்கீகாரத்துக்காக ஆளுநர் சபையின் ஏகமனதான உடன்பாடு தேவைப்படுதல் வேண்டும்:

(i) வங்கியிலிருந்து விலகுவதற்கான உரிமை;

(ii) 7ஆம் உறுப்புரையின் 3 ஆம், 4 ஆம் பந்திகளில் ஏற்பாடு செய்யப்பட்ட பொறுப்பின் மீதான வரையறைகள்; அத்துடன்

(iii) 5 ஆம் உறுப்புரையின் 4 ஆம் பந்தியில் ஏற்பாடுசெய்யப்பட்ட மூலதனப் பங்குத்தொகுதியின் கொள்வனவுபற்றிய உரிமைகள்.

3. உறுப்பினரொன்றிடமிருந்து அல்லது பணிப்பாளர் சபையிடமிருந்து தோன்றகின்றதாயினுஞ்சரி, இவ்வுடன்படிக்கையைத் திருத்துவதற்கான ஏதேனும் முன்மொழிவு, அம்முன்மொழிவை ஆளுநர் சபைக்குமுன்னர் கொண்டுவரவேண்டியவரான ஆளுநர் சபையின் தவிசாளருக்கு அறிவிக்கப்படுதல் வேண்டும். திருத்தமொன்று நிறைவேற்றப்பட்டுள்ள போது, வங்கியானது, எல்லா உறுப்பினர்களுக்கும் முகவரியிட்டனுப்பப் பட்ட அலுவலகமுறையான தொடர்பாடலில் வங்கி அவ்வாறு சான்றுப் படுத்துதல் வேண்டும். அதன்கண் ஆளுநர் சபை வித்தியாசமான காலப்பகுதியைக் குறித்துரைத்தாலொழிய, அலுவலகமுறையான தொடர்பாடல் தேதியிலிருந்து மூன்று (3) மாதங்களுக்குப் பின்னர் எல்லா உறுப்பினர்களுக்காகவும் திருத்தங்கள் வலுவுக்குவருதல் வேண்டும்.

**உறுப்புரை 54 — பொருள்கோடல்**

1. ஏதேனும் உறுப்பினருக்கும் வங்கிக்கும் இடையே அல்லது வங்கியின் இரண்டு அல்லது அதற்குமேற்பட்ட உறுப்பினர்களுக்கிடையே எழுகின்ற இவ்வுடன்படிக்கையின் ஏற்பாடுகளினது பொருள்கோடல் அல்லது பிரயோகம் பற்றிய ஏதேனும் கேள்வி, முடிபுக்காகப் பணிப்பாளர் சபைக்குச் சமர்ப்பிக்கப்படுதல் வேண்டும். அச்சபையில் அதன் நாட்டினத்தைச் சேர்ந்த பணிப்பாளரெவரும் இராதிருப்பின், கவனத்தின் கீழுள்ள கேள்வியினால் குறிப்பாகப் பாதிக்கப்பட்ட உறுப்பினரொன்று அத்தகைய கவனத்துட்கொள்ளுதலின்போது பணிப்பாளர் சபையின் நேரடிப் பிரதிநிதித்துவத்துக்கு உரித்துடையதாதல் வேண்டும்; எவ்வாறாயினும், அத்தகைய உறுப்பினரின் பிரதிநிதி வாக்கெதனையும் கொண்டிருத்தலாகாது. அத்தகைய பிரதிநிதித்துவ உரிமை ஆளுநர் சபையினால் ஒழுங்குபடுத்தப்படுதல் வேண்டும்.

2. இவ்வுறுப்புரையின் 1 ஆம் பந்தியின்கீழான முடிபொன்றைப் பணிப்பாளர் சபை கொடுத்துள்ள ஏதேனும் விடயத்தில், கேள்வியானது ஆளுநர் சபைக்கு ஆற்றுப்படுத்தப்படுதல் வேண்டுமென ஏதேனும் உறுப்பினர் தேவைப்படுத்தலாம்; அதன் முடிபு இறுதியானதாதல்

வேண்டும். ஆளுநர் சபையின் முடிடைப் பெறும்வரை, வங்கியானது, அவசியமென அது கருதுகின்றவாறான அளவுவரை, பணிப்பாளர் சபையின் முடிபினது அடிப்படையில் செயலாற்றுதல் வேண்டும்.

**உறுப்புரை 55 — நடுத்தீர்ப்பு**

வங்கியின் தொழிற்பாடுகளை முடிவுறுத்துவதற்கான தீர்மானம் நிறைவேற்றப்பட்டபின்னர் வங்கிக்கும் உறுப்பினராக இல்லாதொழிந்துள்ள ஒரு நாட்டுக்குமிடையே அல்லது வங்கிக்கும் ஏதேனும் உறுப்பினருக்குமிடையே உடன்பாடின்மை எழுந்தால், அத்தகைய உடன்பாடின்மை, மூன்று நடுத்தீர்ப்பாளர்களைக் கொண்ட நியாயசபையொன்றினாலான நடுத்தீர்ப்புக்குச் சமர்ப்பிக்கப்படுதல் வேண்டும். நடுத்தீர்ப்பாளர்களுள் ஒருவர் வங்கியினாலும் இன்னொருவர் சம்பந்தப்பட்ட நாட்டினாலும்,மூன்றாவது ஆள், திறத்தவர்கள் வேறுவகையாக உடன்பட்டாலொழிய, சர்வதேச நீதிமன்றத்தின் தலைவரினால் அல்லது ஆளுநர் சபையினால் நிறைவேற்றப்பட்ட ஒழுங்குவிதிகளின்மூலம் விதித்துரைக்கப்பட்டிருக்கக்கூடியவாறான அத்தகைய வேறு அதிகாரியினாலும் நியமிக்கப்படுதல் வேண்டும். இறுதியானதும் திறத்தவர்களைப் பிணிப்பதாகவும் இருக்கவேண்டிய முடிபொன்றை எடுப்பதற்கு நடுத்தீர்ப்பாளர்களின் பெரும்பான்மை வாக்கு போதியதாக விருத்தல் வேண்டும். மூன்றாவது நடுத்தீர்ப்பாளர், நடவடிக்கை முறை பற்றிய எல்லாக் கேள்விகளும் தொடர்பில் திறத்தவர்கள் உடன்பாடின்மையுள்ளவர்களாகவுள்ள ஏதேனும் விடயத்தில் அது தொடர்பிலான தீர்த்துவைத்தலைச் செய்வதற்குத் தத்துவமளிக்கப் பட்டவராதல் வேண்டும்.

**உறுப்புரை 56 — அங்கீகாரம் கொடுக்கப்பட்டதெனக் கருதப்படுதல்**

53 ஆம் உறுப்புரையின் 2 ஆம் பந்தியின்கீழ் தவிர வங்கியினால் ஏதேனும் செயல் புரியப்படுவதற்குமுன்னர் ஏதேனும் உறுப்பினரின் அங்கீகாரம் தேவைப்படுத்தப்படும் போதெல்லாம், உத்தேசிக்கப்பட்ட செயல் பற்றி உறுப்பினருக்கு அறிவிப்பதில் வங்கி நிர்ணயிக்கக்கூடியவாறான அத்தகைய நியாயமான காலப்பகுதியினுள் அவ்வுறுப்பினர் ஆட்சேபனையொன்றை முன்வைத்தாலொழிய அங்கீகாரம்கொடுக்கப்பட்டுள்ளதெனக் கருதப்படுதல் வேண்டும்.

## அத்தியாயம் XI

### இறுதி ஏற்பாடுகள்

**உறுப்புரை 57 — கையொப்பமும் வைப்பிடுதலும்**

1. (இதனகத்துப்பின்னர் “வைப்பகம்” எனவழைக்கப்படும்) சீனமக்கள் குடியரசின் அரசாங்கத்திடம் வைப்பிடப்பட்ட இவ்வுடன் படிக்கை, அட்டவணை அ வில் அவற்றின் பெயர்கள் எடுத்துக்கூறப்பட்ட நாடுகளின் அரசாங்கங்களினால் கையொப்பத்துக்காக 2015, திசெம்பர் 31 ஆந்தேதிவரை கிடைக்கக்கூடியதாதல் வேண்டும்.

2. வைப்பகமானது இவ்வுடன்படிக்கையின் சான்றுப்படுத்தப்பட்ட பிரதிகளை வங்கியின் உறுப்பினர்களாக வருகின்ற எல்லாக் கையொப்ப மிடுநருக்கும் ஏனைய நாடுகளுக்கும் அனுப்புதல் வேண்டும்.

**உறுப்புரை 58 — ஏற்புறுதி, ஏற்றுக்கொள்கை அல்லது அங்கீகாரம்**

1. இவ்வுடன்படிக்கை, கையொப்பமிடுநர்களினால் ஏற்புறுதி செய்யப் படுவதற்கு, ஏற்றுக்கொள்ளப்படுவதற்கு அல்லது அங்கீகரிக்கப்படு வதற்கு அமைந்ததாதல் வேண்டும். ஏற்புறுதி, ஏற்றுக்கொள்கை அல்லது அங்கீகாரச் சாதனங்கள், 2016, திசெம்பர் 31 ஆந்தேதிக்குப் பிந்தாமல், அல்லது அவசியமாயின், 28 ஆம் உறுப்புரையில் ஏற்பாடுசெய்யப் பட்டவாறாக விசேட பெரும்பான்மை வாக்கின்மூலம் ஆளுநர் சபையி னால் முடிபுசெய்யப்படக்கூடியவாறான அத்தகைய பிந்திய தேதிவரை வைப்பகத்திடம் வைப்பிடப்படுதல் வேண்டும். வைப்பகமானது, ஒவ்வொரு வைப்பும் அதன் தேதியும்பற்றி ஏனைய கையொப்பமிடு நர்களுக்கு முறையாக அறிவித்தல் வேண்டும்.

2. இவ்வுடன்படிக்கை வலுவுக்குவரும் தேதிக்குமுன்னர் எந்தக் கையொப்பமிடுநரின் ஏற்புறுதி, ஏற்றுக்கொள்கை அல்லது அங்கீகாரச் சாதனம் வைப்பிடப்படுகின்றதோ அந்தக் கையொப்பமிடுநர் அத்தேதியன்று வங்கியின் உறுப்பினராக வருதல்வேண்டும். முற்போந்த பந்தியின் ஏற்பாடுகளுக்கு இணங்கியொழுகுகின்ற வேறேதேனும் கையொப்பமிடுநர், அதன் ஏற்புறுதி, ஏற்றுக்கொள்கை அல்லது அங்கீகாரச் சாதனம் வைப்பிடப்படுகின்ற தேதியன்று வங்கியின் உறுப்பினராக வருதல் வேண்டும்.

**உறுப்புரை 59 — வலுவுக்குவருதல்**

குறைந்தபட்சம் பத்து (10) கையொப்பமிடுநர்களினாலேனும் ஏற்புறுதி, ஏற்றுக்கொள்கை அல்லது அங்கீகாரச் சாதனங்கள் வைப்பிடப்பட்டுள்ளபோது இவ்வுடன்படிக்கை வலுவுக்குவருதல் வேண்டும்; அவற்றின் ஆரம்ப ஒப்பப்பணங்கள், இவ்வுடன்படிக்கைக்கான அட்டவணை அ வில் எடுத்துக்கூறப்பட்டவாறு, கூட்டுமொத்தத்தில் அத்தகைய ஒப்பப்பணங்களினது மொத்தத்தின் ஐம்பது (50) சதவீதத்துக்கு குறையாததைக் கொண்டிருத்தல் வேண்டும்.

**உறுப்புரை 60 — அங்குரார்ப்பணக் கூட்டமும் தொழிற்பாடுகளைத் தொடங்குதலும்**

1. இவ்வுடன்படிக்கை வலுவுக்கு வந்தவுடன், ஒவ்வோர் உறுப்பினரும் ஆளுநரொருவரை நியமித்தல் வேண்டுமென்பதுடன், வைப்பகம், ஆளுநர் சபையின் அங்குரார்ப்பணக் கூட்டத்தைக் கூட்டுதலும் வேண்டும்.

2. ஆளுநர் சபை அதன் அங்குரார்ப்பணக் கூட்டத்தில்:

(i) தலைவரைத் தேர்ந்தெடுத்தல் வேண்டும்;

(ii) 25 ஆம் உறுப்புரையின் 1 ஆம் பந்திக்கிணங்க வங்கியின் பணிப்பாளர்களைத் தேர்ந்தெடுத்தல் வேண்டும்; ஆயின், இதுகாலவரை உறுப்பினர்களாக வராத உறுப்பினர்களினதும் கையொப்பமிடுநர்களினதும் எண்ணிக்கையைக் கவனத்துட்கொண்டு, ஆளுநர்சபை, இரண்டாண்டுகளுக்குக் குறைவான ஆரம்பக் காலப்பகுதியொன்றுக்காகக் குறைந்த எண்ணிக்கையினரான பணிப்பாளர்களைத் தேர்ந்தெடுப்பதற்கு முடிபு செய்யலாம்;

(iii) வங்கி எத்தேதியன்று அதன் தொழிற்பாடுகளைத் தொடங்க வேண்டுமோ அத்தேதியைத் தீர்மானிப்பதற்கான ஒழுங்கேற்பாடுகளைச் செய்தல் வேண்டும்; அத்துடன்

(iv) வங்கியின் தொழிற்பாடுகளைத் தொடங்குதவற்காக ஆயத்தஞ் செய்வதற்கு அவசியமானவாறான அத்தகைய வேறு ஒழுங்கேற்பாடுகளைச் செய்தல் வேண்டும்.

3. வங்கியானது, அதன் தொழிற்பாடுகள் தொடங்குகின்ற தேதிபற்றி அதன் உறுப்பினர்களுக்கு அறிவித்தல் வேண்டும்.

சீனமக்கள் குடியரசு, பீஜிங்கில், வைப்பகத்தின் சுவடிக்கூடத்தில் வைப்பிடப்பட்ட தனி மூலப்பிரதியாக 2015, யூன் மாதம் 29 ஆம் தேதியன்று நிறைவேற்றப்பட்டது; இதன் ஆங்கில, சீன மற்றும் பிரெஞ்சு உரைகள் சமமானமுறையில் மெய்யுறுதியானவை.

## அட்டவணை அ

*58 ஆம் உறுப்புரைக்கிணங்க உறுப்பினர்களாக வரக்கூடிய நாடுகளுக்காக அதிகாரமளிக்கப்பட்ட மூலதனப் பங்குத்தொகுதிக்கான ஆரம்ப ஒப்பப்பணங்கள்*

### பாகம் அ.

### பிராந்திய உறுப்பினர்கள்

| | பங்குகளின் எண்ணிக்கை | மூலதன ஒப்பப்பணம் ($மில்லியனில்) |
|---|---|---|
| அவுஸ்திரேலியா | 36,912 | 3,691.2 |
| அசர்பைஜான் | 2,541 | 254.1 |
| பங்களாதேஷ் | 6,605 | 660.5 |
| புரூனாய் தருஸ்ஸலாம் | 524 | 52.4 |
| கம்போடியா | 623 | 62.3 |
| சீனா | 297,804 | 29,780.4 |
| ஜோர்ஜியா | 539 | 53.9 |
| இந்தியா | 83,673 | 8,367.3 |
| இந்தோனேஷியா | 33,607 | 3,360.7 |
| ஈரான் | 15,808 | 1,580.8 |
| இஸ்ரவேல் | 7,499 | 749.9 |
| ஜோர்தான் | 1,192 | 119.2 |
| கசக்ஸ்டான் | 7,293 | 729.3 |
| கொரியா | 37,388 | 3,738.8 |
| குவைத் | 5,360 | 536.0 |
| கைர்ஜிஸ் குடியரசு | 268 | 26.8 |
| லாஓ மக்கள் சனநாயகக் குடியரசு | 430 | 43.0 |
| மலேஷியா | 1,095 | 109.5 |
| மாலைதீவு | 72 | 7.2 |
| மொங்கோலியா | 411 | 41.1 |
| மியன்மார் | 2,645 | 264.5 |
| நேபாளம் | 809 | 80.9 |
| நீயூசிலாந்து | 4,615 | 461.5 |
| ஓமான் | 2,592 | 259.2 |
| பாகிஸ்தான் | 10,341 | 1,034.1 |
| பிலிப்பைன்ஸ் | 9,791 | 979.1 |
| கட்டார் | 6,044 | 604.4 |
| ருசியா | 65,362 | 6,536.2 |
| சவுதி அரேபியா | 25,446 | 2,544.6 |
| சிங்கப்பூர் | 2,500 | 250.0 |
| இலங்கை | 2,690 | 269.0 |

| | | |
|---|---|---|
| தஜிகிஸ்தான் | 309 | 30.9 |
| தாய்லாந்து | 14,275 | 1,427.5 |
| துருக்கி | 26,099 | 2,609.9 |
| யுனைடட் அரப் எமிரேட்ஸ் | 11,857 | 1,185.7 |
| உஸ்பெகிஸ்தான் | 2,198 | 219.8 |
| வியட்னாம் | 6,633 | 663.3 |
| குறித்தொதுக்கப்படாதது | 16,150 | 1,615.0 |
| **மொத்தம்** | 750,000 | 75,000.0 |

**பாகம் ஆ.**

**பிராந்தியச்சார்பற்ற உறுப்பினர்கள்**

| | **பங்குகளின் எண்ணிக்கை** | **மூலதன ஒப்பப்பணம் ($மில்லியனில்)** |
|---|---|---|
| ஒஸ்ரியா | 5,008 | 500.8 |
| பிரேசில் | 31,810 | 3,181.0 |
| டென்மார்க் | 3,695 | 369.5 |
| எகிப்து | 6,505 | 650.5 |
| பின்லாந்து | 3,103 | 310.3 |
| பிரான்ஸ் | 33,756 | 3,375.6 |
| ஜேர்மனி | 44,842 | 4,484.2 |
| ஐஸ்லாந்து | 176 | 17.6 |
| இத்தாலி | 25,718 | 2,571.8 |
| லக்சம்பேர்க் | 697 | 69.7 |
| மோல்ட்டா | 136 | 13.6 |
| நெதர்லாந்து | 10,313 | 1,031.3 |
| நோர்வே | 5,506 | 550.6 |
| போலாந்து | 8,318 | 831.8 |
| போர்ச்சுக்கல் | 650 | 65.0 |
| தென் ஆபிரிக்கா | 5,905 | 590.5 |
| ஸ்பேன் | 17,615 | 1,761.5 |
| சுவீடன் | 6,300 | 630.0 |
| சுவிட்சலாந்து | 7,064 | 706.4 |
| ஐக்கிய இராச்சியம் | 30,547 | 3,054.7 |
| குறித்தொதுக்கப்படாதது | 2,336 | 233.6 |
| **மொத்தம்** | 250,000 | 25,000.0 |
| **முழுமொத்தம்** | **1,000,000** | **100,000.0** |

**அட்டவணை ஆ**

**பணிப்பாளர்களைத் தேர்ந்தெடுத்தல்**

ஆளுநர் சபையானது, பின்வரும் ஏற்பாடுகளுக்கிணங்க, பணிப்பாளர் களின் ஒவ்வொரு தேர்தலையும் நடாத்துவதற்கான விதிகளை விதித் துரைத்தல் வேண்டும்.

1. **தேர்தற்றொகுதிகள்**. — ஒவ்வொரு பணிப்பாளரும் ஒரு தேர்தற் றொகுதியில் ஒன்று அல்லது அதற்கு மேற்பட்ட உறுப்பினர்களைப் பிரதிநிதித்துவப்படுத்துதல் வேண்டும். ஒவ்வொரு தேர்தற்றொகுதி யினதும் மொத்தக் கூட்டுமொத்த வாக்களிக்கும் தத்துவம், 28 ஆம் உறுப்புரையின் 3 ஆம் பந்தியின்கீழ் பணிப்பாளர் அளிப்பதற்கு உரித் துடையவராகவுள்ள வாக்குகளைக் கொண்டிருத்தல் வேண்டும்.

2. **தேர்தற்றொகுதி வாக்களிக்கும் தத்துவம்**. — ஒவ்வொரு தேர்தலுக் காகவும், ஆளுநர் சபை, பிராந்திய உறுப்பினர்களைப் பிரதிநிதித்துவப் படுத்துகின்ற ஆளுநர்களினால் தேர்ந்தெடுக்கப்படவேண்டிய பணிப் பாளர்களுக்கான தேர்தற்றொகுதி வாக்களிக்கும் தத்துவத்துக்காகக் குறைந்தபட்ச நூற்றுவீதத்தையும் (பிராந்தியப் பணிப்பாளர்கள்) பிராந்தியச்சார்பற்ற உறுப்பினர்களைப் பிரதிநிதித்துவப்படுத்துகின்ற ஆளுநர்களினால் தேர்ந்தெடுக்கப்படவேண்டிய பணிப்பாளர்களுக்கான தேர்தற்றொகுதி வாக்களிக்கும் தத்துவத்துக்காகக் குறைந்தபட்ச நூற்று வீதத்தையும் (பிராந்தியச்சார்பற்ற பணிப்பாளர்கள்) நிலைநாட்டுதல் வேண்டும்.

(அ) பிராந்தியப் பணிப்பாளர்களுக்கான குறைந்தபட்ச நூற்று வீதம், பிராந்திய உறுப்பினர்களைப் பிரதிநிதித்துவப்படுத்து கின்ற ஆளுநர்களினால் தேர்தலில் அளிக்கப்படுவதற்குத் தகவுள்ள மொத்த வாக்குகளின் நூற்றுவீதமாக நிர்ணயிக்கப் படுதல் வேண்டும் (பிராந்திய ஆளுநர்கள்). பிராந்தியப் பணிப் பாளர்களுக்கான ஆரம்பக் குறைந்தபட்ச நூற்றுவீதம் 6 சத வீதமாதல் வேண்டும்.

(ஆ) பிராந்தியச்சார்பற்ற பணிப்பாளர்களுக்கான குறைந்தபட்ச நூற்றுவீதம், பிராந்தியச்சார்பற்ற உறுப்பினர்களைப் பிரதிநிதித்துவப்படுத்துகின்ற ஆளுநர்களினால் தேர்தலில் அளிக்கப்படுவதற்குத் தகவுள்ள மொத்த வாக்குகளின் நூற்று வீதமாக நிர்ணயிக்கப்படுதல் வேண்டும் (பிராந்தியச்சார்பற்ற

ஆளுநர்கள்). பிராந்தியச்சார்பற்ற பணிப்பாளர்களுக்கான ஆரம்பக் குறைந்தபட்ச நூற்றுவீதம் 15 சதவீதமாதல் வேண்டும்.

*3.* ***சீராக்குகை நூற்றுவீதம்.*** — *கீழே 7 ஆம் பந்தியின்கீழ் அடுத்துப் பின்னரான வாக்கெடுப்புச் சுழற்சிகள் தேவைப்படும்போது தேர்தற் றொகுதிகள் எங்கணும் வாக்களிக்கும் தத்துவத்தைச் சீராக்குவதற்கென ஆளுநர் சபை, ஒவ்வொரு தேர்தலுக்காகவும், பிராந்தியப் பணிப்பாளர்களுக்கான சீராக்குகை நூற்றுவீதத்தையும் பிராந்தியச்சார்பற்ற பணிப்பாளர்களுக்கான சீராக்குகை நூற்றுவீதத்தையும் நிலைநாட்டுதல் வேண்டும். ஒவ்வொரு சீராக்குகை நூற்றுவீதமும் நேரொத்ததாகவுள்ள குறைந்தபட்ச நூற்றுவீதத்தைப் பார்க்கிலும் உயர்வானதாகவிருத்தல் வேண்டும்.*

(அ) பிராந்தியப் பணிப்பாளர்களுக்கான சீராக்குகை நூற்றுவீதம், பிராந்திய ஆளுநர்களினால் தேர்தலில் அளிக்கப்படுவதற்குத் தகவுள்ள மொத்த வாக்குகளின் நூற்றுவீதமாக நிர்ணயிக்கப்படுதல் வேண்டும். பிராந்தியப் பணிப்பாளர்களுக்கான ஆரம்பச் சீராக்குகை நூற்றுவீதம் 15 சதவீதமாதல் வேண்டும்.

(ஆ) பிராந்தியச்சார்பற்ற பணிப்பாளர்களுக்கான சீராக்குகை நூற்றுவீதம், பிராந்தியச்சார்பற்ற ஆளுநர்களினால் தேர்தலில் அளிக்கப்படுவதற்குத் தகவுள்ள மொத்த வாக்குகளின் நூற்றுவீதமாக நிர்ணயிக்கப்படுதல் வேண்டும். பிராந்தியச்சார்பற்ற பணிப்பாளர்களுக்கான ஆரம்பச் சீராக்குகை நூற்றுவீதம் 60 சதவீதமாதல் வேண்டும்.

*4.* ***வேட்பாளர்களின் எண்ணிக்கை.*** — *ஒவ்வொரு தேர்தலுக்காகவும், ஆளுநர் சபை, 25 ஆம் உறுப்புரையின் 2 ஆம் பந்தியைப் பின்பற்றி பணிப்பாளர் சபையின் அளவும் அமைப்பும் மீதான அதன் முடிபுகளின் நோக்கில், தேர்ந்தெடுக்கப்படவேண்டிய பிராந்தியப் பணிப்பாளர்களினதும் பிராந்தியச்சார்பற்ற பணிப்பாளர்களினதும் எண்ணிக்கையை நிலைநாட்டுதல் வேண்டும்.*

(அ) பிராந்தியப் பணிப்பாளர்களின் ஆரம்ப எண்ணிக்கை ஒன்பதாதல் வேண்டும் ;

(ஆ) பிராந்தியச் சார்பற்ற பணிப்பாளர்களின் ஆரம்ப எண்ணிக்கை மூன்றாதல் வேண்டும்.

5. **பெயர் நியமனங்கள்.** — ஒவ்வோர் ஆளுநரும் ஓராளைமட்டுமே பெயர் குறித்து நியமிக்கலாம். பிராந்தியப் பணிப்பாளர் பதவிக்கான வேட்பாளர்கள் பிராந்திய ஆளுநர்களினால் பெயர் குறித்துநியமிக்கப்படுதல் வேண்டும். பிராந்தியச்சார்பற்ற பணிப்பாளர் பதவிக்கான வேட்பாளர்கள் பிராந்தியச்சார்பற்ற ஆளுநர்களினால் பெயர்குறித்து நியமிக்கப்படுதல் வேண்டும்.

6. **வாக்களித்தல்.** — ஒவ்வோர் ஆளுநரும், 28 ஆம் உறுப்புரையின் 1 ஆம் பந்தியின்கீழ் அவரை நியமிக்கின்ற உறுப்பினர் எந்த வாக்குகளுக்கு உரித்துடையதாகவுள்ளதோ அந்த எல்லா வாக்குகளையும் அளித்து ஒரு வேட்பாளருக்கு வாக்களிக்கலாம். பிராந்தியப் பணிப்பாளர்களின் தேர்தல், பிராந்திய ஆளுநர்களின் வாக்கெடுப்பின் மூலமானதாக இருத்தல் வேண்டும். பிராந்தியச்சார்பற்ற பணிப்பாளர்களின் தேர்தல், பிராந்தியச்சார்பற்ற ஆளுநர்களின் வாக்கெடுப்பின் மூலமானதாக இருத்தல் வேண்டும்.

7. **முதலாவது வாக்கெடுப்பு.** — முதலாவது வாக்கெடுப்பின்மீது, தேர்ந்தெடுக்கப்படவேண்டிய பணிப்பாளர்களின் எண்ணிக்கைவரை, அதியுச்ச எண்ணிக்கையினவான வாக்குகளைப் பெறுகின்ற வேட்பாளர்கள், பணிப்பாளர்களாகத் தேர்ந்தெடுக்கப்படுதல் வேண்டும்; ஆயின், தேர்ந்தெடுக்கப்படுவதற்கு, வேட்பாளரொருவர், ஏற்புடையற்பாலதான குறைந்தபட்ச நூற்றுவீதத்தை எய்துவதற்குப் போதிய எண்ணிக்கையினவான வாக்குகளைப் பெற்றிருத்தல் வேண்டும்.

(அ) தேவைப்பட்ட எண்ணிக்கையினரான பணிப்பாளர்கள் முதலாவது வாக்கெடுப்பின்மீது தேர்ந்தெடுக்கப்படாவிடின் மற்றும் வேட்பாளர்களின் எண்ணிக்கை, தேர்ந்தெடுக்கப்படவேண்டிய பணிப்பாளர்களின் எண்ணிக்கையைப் போன்றதாகவிருந்திருப்பின், ஆளுநர் சபை, விடயத்துக்கேற்ப, பிராந்தியப் பணிப்பாளர்களின் தேர்தலை அல்லது பிராந்தியச்சார்பற்ற பணிப்பாளர்களின் தேர்தலைப் பூர்த்திசெய்வதற்கான அடுத்துப் பின்னரான நடவடிக்கைகளைத் தீர்மானித்தல் வேண்டும்.

8. **அடுத்துப்பின்னரான வாக்கெடுப்புகள்.** — முதலாவது வாக்கெடுப்பின்மீது தேவைப்பட்ட எண்ணிக்கையினரான பணிப்பாளர்கள் தேர்ந்தெடுக்கப்படாவிடின் மற்றும் வாக்கெடுப்பின்மீது தேர்ந்தெடுக்கப்படவேண்டிய பணிப்பாளர்களின் எண்ணிக்கையிலும் பார்க்கக் கூடுத

லான வேட்பாளர்கள் இருந்திருப்பின், அவசியமானவாறு அடுத்துப் பின்னரான வாக்கெடுப்புகள் இருத்தல் வேண்டும். அடுத்துப்பின்னரான வாக்கெடுப்புகளுக்காக:

(அ) முற்போந்த வாக்கெடுப்பில் மிகக்குறைந்த எண்ணிக்கையின வான வாக்குகளைப் பெறுகின்ற வேட்பாளர் அடுத்த வாக் கெடுப்பில் வேட்பாளராகவிருத்தலாகாது.

(ஆ) பின்வருவோரினால் மட்டுமே வாக்குகள் அளிக்கப்படுதல் வேண்டும்:

(i) தேர்ந்தெடுக்கப்படாத வேட்பாளரொருவருக்காக முற்போந்த வாக்கெடுப்பில் வாக்களித்த ஆளுநர்கள்; மற்றும்

(ii) தேர்ந்தெடுக்கப்பட்ட வேட்பாளரொருவருக்கான எந்த ஆளுநர்களின் வாக்குகள் கீழே (இ) இன் கீழான ஏற்புடையற்பாலதான சீராக்குகை நூற்றுவீதத்துக்கு மேலாக அவ்வேட்பாளருக்கான வாக்குகளை அதிகரித் துள்ளனவெனக் கருதப்படுகின்றதோ அந்த ஆளுநர் கள்.

(இ) ஒவ்வொரு வேட்பாளருக்கும் வாக்குகளை அளித்துள்ள எல்லா ஆளுநர்களினதும் வாக்குகள், ஏற்புடையற்பாலதான சீராக்குகை நூற்றுவீதத்தைக் குறிக்கின்ற வாக்குகளின் எண்ணிக்கை விஞ்சப்படும்வரை, எண்ணிக்கையின் வீழ் வரிசை ஒழுங்குப்படி சேர்க்கப்படுதல் வேண்டும். எந்த ஆளுநரின் வாக்குகள் மொத்தத்தைச் சீராக்குகை நூற்று வீதத்துக்கு மேலாகக் கொண்டுவந்ததோ அந்த ஆளுநருட்பட, அந்தக் கணிப்பீட்டில் எந்த ஆளுநர்களின் வாக்குகள் எண்ணப்பட்டனவோ அந்த ஆளுநர்கள், அப்பணிப்பாள ருக்குத் தமது வாக்குகள் எல்லாவற்றையும் அளித்துள்ளன ரெனக் கருதப்படுதல் வேண்டும். அக்கணிப்பீட்டில் எந்த எஞ்சியுள்ள ஆளுநர்களின் வாக்குகள் எண்ணப்பட வில்லையோ அந்த எஞ்சியுள்ள ஆளுநர்கள், வேட்பாளரின் மொத்த வாக்குகளைச் சீராக்குகை நூற்றுவீதத்துக்கு மேலாக அதிகரித்துள்ளனரெனக் கருதப்படுதல் வேண்டுமென்பதுடன், அந்த ஆளுநர்களின் வாக்குகள் அந்த வேட்பாளரின் தேர்தலுக்கு எண்ணப்படுதலுமாகாது. இந்த எஞ்சியுள்ள ஆளுநர்கள் அடுத்த வாக்கெடுப்பில் வாக்களிக்கலாம்.

(ஈ) அடுத்துப்பின்னரான ஏதேனும் வாக்கெடுப்பில் ஒரு பணிப்பாளர் மட்டுமே தேர்ந்தெடுக்கப்படுவதற்கு இருப்பின், எஞ்சியுள்ள வாக்குகளின் சாதாரணப் பெரும்பான்மை மூலம் அப்பணிப்பாளர் தேர்ந்தெடுக்கப்படலாம். அத்தகைய எல்லா எஞ்சியுள்ள வாக்குகளும் கடைசிப் பணிப்பாளரின் தேர்தலுக்கு எண்ணப்பட்டனவாகக் கருதப்படுதல் வேண்டும்.

9. **வாக்குகளைக் குறித்தளித்தல்.** — தேர்தலுக்காக வாக்களிப்பதில் பங்குபற்றாத அல்லது அவரது வாக்குகள் ஒரு பணிப்பாளரைத் தேர்ந்தெடுப்பதற்குப் பங்களிக்காத எவரேனும் ஆளுநர், அவர் எந்த வாக்குகளுக்கு உரித்துடையவராகவுள்ளாரோ அந்த வாக்குகளைத் தேர்ந்தெடுக்கப்பட்டவொரு பணிப்பாளருக்குக் குறித்தளிக்கலாம்; ஆயின், அத்தகைய ஆளுநர், அத்தகைய குறித்தளிப்புக்கு அப்பணிப்பாளரைத் தேர்ந்தெடுத்துள்ள அவ்வாளுநர்கள் எல்லோரினதும் உடன்பாட்டை முதலில் பெற்றிருத்தல் வேண்டும்.

10. **தாபக உறுப்பினரின் சிறப்புரிமைகள்.** — பணிப்பாளர்களுக்காக ஆளுநர்களினாலான பெயர்நியமனமும் வாக்களிப்பும், பணிப்பாளர்களினாலான மாற்றுப்பணிப்பாளர்களின் நியமனமும், ஒவ்வொரு தாபக உறுப்பினரும் நிரந்தரமாக அல்லது சுற்றுமுறை அடிப்படையில் அதன் தேர்தற்றொகுதியில் பணிப்பாளரை அல்லது மாற்றுப்பணிப்பாளரைப் பெயர் குறிப்பதற்கான சிறப்புரிமையைக் கொண்டிருத்தல் வேண்டுமென்ற நெறிக்கு மதிப்புக்கொடுத்தல் வேண்டும்.

பாராளுமன்றத்தின் சட்டமூலங்களினதும் சட்டங்களினதும் தமிழ்ப் பிரதிகளின் வருடாந்த சந்தா (உள்நாடு) ரூபா 1,387 : (வெளிநாடு) ரூபா 1,849 : ஒவ்வோராண்டும் திசெம்பர் மாதம் 15 ஆந் தேதிக்கு முன் எதிர்வரும் ஆண்டுக்கான சந்தாப்பணம் அத்தியட்சகர், அரசாங்க வெளியீட்டலுவலகம், அரசாங்க தகவல் திணைக்களம், இல. 163, கிருலபனை மாவத்தை, பொல்ஹேன்கொடை, கொழும்பு 05 என்ற விலாசத்திற்கு அனுப்பப்பட வேண்டும்